
477/2



# நமது கோரிக்கை

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

6743

# நமது கோரிக்கை

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

CONNEMARA PUBLIC LIBRARY
19 FEB 1972
MADRAS

**த மி ழ ர சு**

*16—2—1972 இதழின்*

# இலவச இணைப்பு

CONNEMARA PUBLIC LIBRARY
19 FEB 1972
MADRAS

# பதிப்புரை

கடந்த 22–1–1972 அன்று சட்ட மன்ற மேலவை, சட்டப் பேரவை இவைகளின் கூட்டுக் கூட்டத்தில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்தும், திருத்தங்கள் தந்தும் பல உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் ஆற்றிய உரைகளுக்குப் பின்னர் 31–1–1972-ல் தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள், காலையில் சட்டப் பேரவையில் ஒரு மணி நேரமும், மாலையில் சட்டமன்ற மேலவையில் ஒரு மணி நேரமும் ஆற்றிய பதிலுரைகளைத் தொகுத்து 'நமது கோரிக்கை' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம்.

எழுப்பப்பட்ட பல வாதங்களுக்கும் உரிய பதில்கள் அடங்கியுள்ள இச்சிறு நூல் வழக்கம்போல் 'தமிழரசு' இதழின் இணைப்பாக வழங்கப்படுகிறது.

சென்னை
10–2–1972

செய்தி–மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.


# நமது கோரிக்கை

## சட்டப் பேரவையில் முதல்வர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ! ஆளுநர் பெருமகனுர் அவர்கள் சட்டப் பேரவை, சட்ட மேலவைக் கூட்டுக் கூட்டத்திலே ஆற்றிய உரையினையொட்டி இந்த மாமன்றத்தில் இதுவரையிலும் நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட 49 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிவித்திருக்கிறார்கள்.

ஆளுநர் அவர்களுடைய உரையின் தொடக்கத்தில், ''நமது முப்படையினரின் வீரதீரத்தாலும், நமது பிரதம மந்திரி அவர்களின் ஒப்புவமையற்ற பதட்டமடையாத தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது'' என்று போரின் முடிவு குறித்துப் பொறுப்போடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய பொழுது இதிலே நாட்டின் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் தமிழ் நாட்டு முதலமைச்சரையும் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் இப்படியெல்லாம் 'பர்சனலிட்டி கல்ட்' வளர்க்கப் படக்கூடாது என்று தெரிவித்தார்கள்.



ஒருவேளை இதனையொட்டித்தானே என்னவோ நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளுக்கும் வீரர்களுக்கும் மாத்திரம் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்திற்கு என்று மட்டும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருடைய பெயரும், பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்களுடைய பெயரும் விடப்பட்டு இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன்.

ஆனால், இது அண்மையில்தான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கும் என்று கருது கிறேன். போர் முடிந்தவுடன் இந்த மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானம் எடுத்த பொழுது உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், "திருமதி இந்திரா காந்திக்குக் கிடைத்த வெற்றி தாய்க்குலத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி" என்று சொன்னார்கள்.

நான்கூடச் சொன்னேன், தாய்க்குலத்தின் பெருமையை உலகம் எல்லாம் உணர்ந்தும் நீங்கள் தாமதமாக உணர்ந் ததற்காக நன்றி என்று. இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் 'பர்சனல்டி கல்ட்' என்ற வகையிலே—அவ்வளவு புகழ்ந்த காங்கிரஸ் கட்சியினர் திடீரென்று திருமதி இந்திரா காந்தி அவர்களைப் புகழ்வதே 'பர்சனல்டி கல்ட்' என்று குறிப்பிடுவது வியப்புக்கும் வேதனைக்கும் உரியதாக இருக் கிறது.

திருமதி அனந்தநாயகி: நாங்கள் பாராட்டவேண்டிய நேரத் திலே பாராட்டினோம். நீங்கள் அதையே வைத்து விளம் பரம் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் 'பர்ச னல்டி கல்ட்'; திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் பாராட்ட வேண் டிய நேரத்திலே பாராட்டாமல் இருப்பதே கிடையாது.

முதல்வர் கலைஞர்: இந்த அருமையான கருத்தை அப்படியே திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் முதலமைச்சரைப் பாராட்டுகின்ற பாவத்தை அவர் எங்கும் செய்ததாகத் தெரியவில்லை.



இந்த உரையில் போர் வீரர்களின் குடும்பத் தினரைப் பற்றிக் குறிப் பிட்டு, அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவியளிக்கத் தமிழ்நாடு அரசு பல நடவடிக்கை களை மேற்கொண்டுள்ள தெனக் கூறிக்கொள்வ தில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தமிழ்நாடு அரசைப் பற்றித் தான் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் நல்லவேளையாக என்னுடைய பெயர் இதிலே குறிப்பிடப்படவில்லை என் பதும், முதலமைச்சர் என்னும் வார்த்தை இந்த இடத் திலே வரவில்லை என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

ஆனால், பிரதமர் திருமதி இந்திரா காந்தி மட்டுமே பாராட்டப்பட்டிருக்கிறாரா என்றால் இல்லை. இரவீந்திரநாத் டாகூர் அவர்கள் குறிப்பிட்ட பொன்மொழியை எடுத்துக்காட்டி, ''இழிக்கப்பட்ட இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் தங்கள் தன் மானத்தை நிலைநாட்டியுள்ளது மட்டுமின்றி, தங்கள் நாணயத்தையும் காப்பாற்றி ஜனநாயக அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளனர்'' எனக் கூறிக்கொள்வதில் நாம் பெருமைப்படலாம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ''இந்தியாவில் புகலடைய வேண்டி வந்தது. இலட்சக்கணக்கான மக்கள் அவதியால் அல்லலுற்று ஓடிவந்தபோது அஞ்சேல் என அவர்களுக்குத் தஞ்சமளித்துக் காப்பாற்றுவதற்கு இந்த நாடு முழுவதும் ஓரணியாகத் திரண்டு நின்றது'' என்று நாட்டு மக்கள் ஓரணியாகத் திரண்டதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அடுத்து, ''இந்திய மக்கள் அனைவரும் மனமார்ந்த ஒத்துழைப்பு நல்கியிராவிட்டால் நமக்கு ஏற்பட்ட சுமையினைத் தாங்க ஆதாரங்கள் அனைத்தையும் திரட்ட முடியாமற் போயிருக்கும்'' என்று இந்திய மக்களைத் தன் உரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற அடிப்படையிலே எழுந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் இந்த நேரத்தில் நானும் மீண்டும் ஒரு முறை தமிழ் நாட்டின் சார்பாக இந்தப் போரின் வெற்றிக்கு முழு முதல் காரணமாயிருந்த முப்படைத் தளபதிகளையும், வீரர்களையும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களையும், பாதுகாப்பு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்களையும், இந்த வெற்றிக்கு ஈடு கொடுக்கின்ற அளவில் ஓரணியிலே நின்ற நம்முடைய நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரு முறை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்ளுவதிலே நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

வீர மரணம் அடைந்த தமிழ்நாட்டுப் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகள் உடனடியாகச் சென்று சேரவில்லை என்ற கருத்து இங்கே பேசிய சில உறுப்பினர்களால் இரண்டொரு நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தப் போரில் மாண்ட வீரர்களின் எண்ணிக்கை இதுவரையிலே கிடைத்த ஒரு கணக்கின்படி 98 பேராகும். 98 பேரோடு இந்தக் கணக்கு நின்றுவிடுமா என்றால் நிற்காது; அதனால்தான் இது வரையிலே கிடைத்த கணக்கின்படி என்று நான் குறிப்பிட்டேன். அந்த 98 பேரில் 61 பேரின் குடும்பங்களுக்குக் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வீதம் தமிழக அரசு

ஏற்கெனவே அறிவித்தபடி அந்த உதவித் தொகை அளிக்கப் பட்டாகிவிட்டது.

மீதமுள்ள குடும்பங்களில் சரியான வாரிசுதாரர் யார் என்பதைப் பரிசீலனை செய்கின்ற அந்த வகையிலே சற்றுக் காலதாமதம் ஆகிறது. அதுவும் விரைவில் வழங்கப்படப் பரிசீலனைகள் முற்றுப்பெறும்.

சமதர்ம சமுதாயத்தை நோக்கி. . . .

ஆளுநர் பெருமகனாரின் உரையில் குறிப்பிட்டிருக்கின்ற பல கருத்துக்கள் அல்லது தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல திட்டங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் வகையிலே இருந்திடவில்லை என்று இங்குப் பேசிய உறுப்பினர்கள் சிலர் கோடிட்டுக் காட்டினார்கள்.







30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த உச்ச வரம்பினை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று ஆக்கியிருப்பது சமதர்மத் திட்டத்தின் அடிப்படையில்தான் என்பதை அப்படிப் பேசிய உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அது மட்டுமல்ல. கரும்புக்கு, மேய்ச்சல் நிலங்களுக்கு இதுவரையிலேயிருந்த விதிவிலக்கு அகற்றப்பட்டதாக இந்த அரசு முடிவெடுத்து அறிவித்திருப்பதும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதை எடுத்துக் காட்டும் ஓர் அடையாளம் தான்.

அது மட்டுமல்ல. ஏற்கெனவேயிருந்த உச்சவரம்பின் காரணமாகத் தப்பித்துக் கொள்ளும் வகையிலே நாட்டிலே பலபேர் பினாமி என்னும் அளவிற்குச் சட்டத்திலேயிருந்து மறைந்து கொள்ளச் செய்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் கவனித்ததோடு, அதிலிருந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதன் அடிப்படையில் அந்த பினாமிதாரர்களையெல்லாம் பிடிக்கின்ற வகையிலேயும் இந்த அரசு நல்ல முயற்சிகளிலே ஈடு' 'டும் என்று நான் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறேன்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். வெகு அண்மையிலே நடைபெறவிருக்கும் நிலச் சீர்திருத்தம் பற்றிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இவைகளைப் பற்றியும் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றியும் நாம் விவாதிக்க இருக்கிறோம். அதில் தரப்படும் கருத்துக்களின் அடிப்படையில் நல்ல முடிவுகளைத் தமிழ் நாட்டில் நிலச் சீர்திருத்தத்தையொட்டி எடுக்க இருக்கிறோம்.

இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளங்களே தவிர வேறு அல்ல.



பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்லாண்டுக் காலமாக இருந்த பிரச்சினை அவர்களுடைய குடியிருப்பு மனைகள் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்படாமல்இருந்ததாகும்.

அதை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததற்கிணங்க அந்தக் குடியிருப்பு மனைகளைத் தஞ்சை மாவட்டத்திலேயிருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அதைச் செயல் படுத்திக்கொண்டு இருக்கிறோம். அதுவும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது என்பதற்கேற்ற அறிகுறியேயாகும்.


10 பேருந்துத் தடங்களுக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று வரையறுத்து அதற்கு ஓர் உச்ச வரம்பினைக் கொண்டு வந்து, டி. வி. எஸ். , எஸ். ஆர். வி. எஸ்., ஏ. பி. டி., ராமன் அண்ட் ராமன் போன்ற பெரிய பஸ் நிறுவனங்களையெல்லாம் தேசிய உடைமையாக ஆக்கியிருப்பதும் இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கி விரைந்து நடைபோடுகிறது என்பதற்கான அடையாளங்களேயல்லாமல் வேறல்ல.

நம்முடைய சென்னை மாநகரத்திலே 600 குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றியமைத்துக் குடிசைவாழ் மக்களுக்கு நல்ல கல் வீடுகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு தொடங்கப்பட்டு இதற்கு 40 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிடப்பட்டு இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் குடிசைகளாகயிருந்த இடங்களில் நல்ல கல் வீடுகளும், மாடிக் கட்டடங்களும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள்.

இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களே தவிர வேறல்ல.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு

தமிழ்நாட்டினைப் பல ஆண்டுக் காலமாக அலைக்கழித்து வரும் பிரச்சினை, பிச்சைக்காரர்களின் தொல்லை. பிச்சைக்காரர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லை மட்டுமல்ல, பிச்சை எடுப்பவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள், இந்த இரண்டு தொல்லைகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும்–பிச்சைக்காரர்களைக் காப்பாற்றும் முறையில் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இந்த ஆண்டு 3 விடுதிகளையும், தொடர்ந்து பல விடுதிகளையும் தமிழ்நாட்டில் அமைக்க நாம் எடுத்திருக்கும் முறை இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்கிறது என்பதற்கான அடையாளமே தவிர வேறல்ல.

### பின்தங்கியோர் நலன்

பின் தங்கியோர் நலனுக்காக 1966—67-ல் மாநில அரசின் சார்பாகச் செலவழிக்கப்பட்ட தொகை 91 இலட்சம் ரூபாய். ஆனால் 1971—72-ல் அவர்களுடைய நலனுக்காக அது 3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

### அரிசன முன்னேற்றம்

அதே நேரத்தில் அரிசன மக்களுக்காக 1966—67-ல் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கு—நலனுக்கு, மாநில அரசின் சார்பாக 3.59 கோடி ரூபாய் என்றிருந்தது, 1971—72-ல் 5·3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அருமை நண்பர் திரு வடிவேல் அவர்கள் அன்றைக்குப் பேசும் பொழுது குறிப்பிட்டார்கள், 3 கோடி ரூபாயை 5 கோடியாக உயர்த்தியிருப்பதைப் பாராட்டுகிறேன்; அதே நேரத்தில் அரிசன மக்களின் தொகையும் உயர்ந்திருக்கும் என்பதை முதலமைச்சர் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். நான் உடனடியாக அந்தப் புள்ளி விவரங்களைத் தேடிக் கண்டுபிடித்தேன்.

1966—67-ல் 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்காக, அரிசன மக்களுக்காகச் செலவழிக்கப்பட்ட பொழுது இருந்த மக்கள் தொகை 60.6 இலட்சம் பேர்.

60.6 இலட்சம் அரிசன மக்கள் இருந்த பொழுது 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1971—72-ல் 73.96 இலட்சம் தான் அரிசன மக்கள் இருக்கிறார்கள். ஆக, 13 இலட்சம் பேர்கள்தான் ஜனத் தொகையில் உயர்ந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 2 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி, மாநில அரசின் சார்பில் உயர்த்தப் பட்டிருக்கிறது.

### விவசாயக் கடனும் வட்டியும்

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். 'கிராமத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன்கள் போய்ச் சேருவதிலே அவர்கள் தரவேண்டிய வட்டித் தொகை அதிகமாக இருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நீங்கள் 3 சதவிகிதம் வட்டிக்குப் பெற்று அதை 9 சத விகிதம் வட்டிக்குப் கிராமப்புறத்து விவசாயிகளுக்குத் தருகிறீர்களே. அது நியாயமல்ல' என்று எடுத்துரைத்தார்கள்.

நான் அவர்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நிலைமையை விளங்கவைக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட அந்த வட்டி விகிதம் பழைய வட்டி விகிதங்கள் ஆகும். புதிய வட்டி விகிதங்கள், குறுகிய காலக் கடனுக்கு ரிசர்வ் வங்கியில் இருந்து மாநில வங்கிக்கு 4 சதவிகிதம் வட்டி என்ற வகையில் பணம் தரப்படுகிறது.

இதற்கு நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அந்த 4 சதவிகிதம் மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குச் செல்லும்போது 4.5 சதவிகிதமாக மாறுகிறது. அது மாவட்ட வங்கியிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் செல்லும் போது 6.5 சதவிகிதமாக மாறுகிறது. கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விவசாயிக்குச் செல்லும்போது 8.7 சதவிகிதமாக அந்த வட்டி மாறுகிறது.

இப்படி அதிகமாகிறதே என்று கேட்டால் இந்த மூன்று கட்டங்களிலும் ஏற்படுகிற நிர்வாகச் செலவுகள், சங்கத்திலே பங்கு வைத்திருக்கக் கூடியவர்களுக்குத் தரப்படுகின்ற டிவிடெண்ட் போன்றவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே, 3 சதவிகிதம் 9 சதவிகிதம் ஆயிற்று என்று சொல்வது சரியல்ல. 4 சதவிகிதம் என்பது 8.70 சதவிகிதமாக மாறுகிறது. அது மூன்று கட்டங்களிலுள்ள நிர்வாகச் செலவுகளின் காரணமாக இப்படி உயர்ந்திருக்கிறது.

அதே நேரத்தில் அந்த விவசாயிகள் வெளியே கடன் வாங்கினுல் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும்? எவ்வளவு அதிகமான வட்டி கொடுக்க வேண்டுமென்பது உறுப்பினர்கள் அறியாத ஒன்று அல்ல. கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கிராம விவசாயிகள் இந்தக் கடனைப் பெறுவதால் அவர்கள் பயனடைகிறுர்களே அல்லாமல் வேறல்ல.

## மின் கட்டணம்

பொதுவாகப்பேசிய எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலரும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டதைப் பற்றிக் குறை கூறினுர்கள். குறை கூறினுர்களே அல்லாமல் அதை வன்மையாகக் கண்டித்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன்.

மின் கட்டணம் உயர்வு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 1·2 காசுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 10·8 காசு என்று இருந்ததை 12 காசு என்று நாம் உயர்த்தியிருக்கிறேம். இப்படி உயர்த்திய பிறகும் மின் வாரியத்திற்கு 6, 7 கோடி நஷ்டம் வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு மாநிலங்களில் இதைவிட மின் கட்டணம் விவசாயிகளுக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மகாராஷ்ட்ராவில் 18 காசு; பீகாரில் 18 காசு; குஜராத்தில் 16 காசு; ஹரியானாவில் 16 காசு; அஸ்ஸாமில் 16 காசு; உத்தரப்பிரதேசத்தில் 15 காசு; ஆந்திராவில் 12 காசு; மைசூரில் 12 காசு.

கேரளாவில் குறைவாக இருக்கிறது என்று கேட்கக்கூடும். கேரளாவில் இறவைப்பாசனம் அதிகமில்லை. கிணற்றுத் தண்ணீரை எடுத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலைமை இல்லை. அது மாத்திரமல்ல, 'டிஸ்ட்ரிபியூஷன்' செலவும் கேரளாவில் அதிகமில்லை.

ஆகவே, 1·2 காசு என்ற அளவுக்கு நாம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது பெரிய உயர்வு அல்ல என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் பேசினார்கள். ஆளும் கட்சியையச் சேர்ந்த உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். ஆளுநர் உரையில் கைத்தறியாளர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று குறிப்பிட்டார்கள். இது வழக்கமாக நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்திலிருந்தே சொல்லுகின்ற ஒரு சம்பிரதாயம் உண்டு.

### கைத்தறியாளர்களுக்குக் கணிசமான உதவி



ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்பது இயலாத காரியம். தமிழ் நாட்டில் இருக்கும் எல்லாப் பிரச்சினையையும் பற்றி ஆளுநர் உரையில் சொல்லுவது என்றால் ஆளுநர் ஒரு மூன்று நாட்கள் இந்த மாமன்றத்தில் நின்றுகொண்டிருக்க வேண்டிய கஷ்டம் அவருக்கு ஏற்படும். அந்த அளவுக்குப் பெரிய புத்தகத்தைப் படிக்க வேண்டியிருக்கும். அப்போதும் சில விஷயங்கள் விட்டுப் போய் விடக்கூடும்.


ஆளுநர் உரையில் சொல்லப்படாத விஷயங்களை எடுத்துச் சொல்லத்தான் மாமன்றத்திலே விவாதமே நடக்

கிறது. ஆகவே, எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் விவாதிப்பதற்கு விஷயமே இல்லாமல் போய் விடக்கூடும் என்பதால் சில விஷயங்கள் விட்டு வைக்கப்படுகின்றன.

கைத்தறியாளர்களைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டதொகை 750 லட்சம் ரூபாய். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,060 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு கோடி ரூபாய்க்குப் பதிலாக, பத்து கோடி ரூபாய் அளவுக்கு நெசவாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மாத்திரம் 1967—68 முதல் செயல்படுகின்ற முதன்மையான திட்டமாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, அரசே நேரடியாகப் பங்கு கொள்ளும் திட்டமாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலதனத்தில் அரசே பங்கு கொள்கின்ற அளவுக்குத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் காரணமாகப் பயனடைந்த சங்கங்கள் 469. இதற்காக 26 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அரசு உதவி செய்கின்ற காரணத்தால் ரிசர்வ் வங்கியில் இருந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வசதி அளித்து, அவை வளர்ச்சியடைந்திருக்கின்றன. அந்த வளர்ச்சியைப்பார்க்கும்போது 1966—67-ல் 371 லட்சமாக இருந்தது 1971—72-ல் 606 லட்சம் என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.





புது ரகத் துணிகளை உற்பத்தி செய்யப் புதிய நவீன முறைகளைக் கையாண்டு நெசவாளர்கள் பயிற்சி பெறப் புதிய பயிற்சி நிறுவனங்கள் 1969—70-ல் தொடங்கப்பட்டு, ஆண்டு தோறும் அதிலே நூற்றுக்கணக்கானவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

அதற்காக இதுவரை செலவாகியிருக்கும் தொகை மாத்திரம், 1969 முதல் 1971 வரை 11 லட்சம் ரூபாய் ஆகும். அதிலே 1969—70-ல் 353 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். 1970—71-ல் 2160 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். 1971—72-ல் 2,500 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 5,013 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இப்போது நெசவாளர்களுக்கு இருக்கும் முக்கியக்குறைபாடு — அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கிற ஊதியத்தைவிடத் தனியாரிடத்தில் வேலை செய்கிற நெசவாளர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்பதாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் தரப்படுகின்ற ஊதியத்தை வரையறுத்து நிர்ணயிப்பதும், கூட்டுறவுக்கு வெளியில் உள்ள நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதும் அவசியம் என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால், அதற்காக என்று குழு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் குழு இந்த ஊதிய விகிதத்தைப் பற்றி விரைவில் அறிவிக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த




மாமன்றத்தின் மூலமாக நெசவாளர் குடும்பங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தொழில் தகராறுகளும் கழக அரசும்

தொழில் தகராறுகளைப்பற்றி இந்தமன்றத்தில் விரிவாகப் பேசப்பட்டது. நமது திரு பொன்னப்ப நாடார் அவர்களும் வழக்கத்திற்கு மாறாகக் கொஞ்சம் வேகமாகக் கூட அதைப் பற்றிப் பேசி விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள்.

தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை திராவிடமுன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பெரும்பாலான தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலே அரசு எப்போதும் வீண் கவுரவப் பிரச்சினையாக எந்த நேரத்திலும் பார்த்தது கிடையாது என்பதைத் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்றாக உணருவார்கள்.

ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று வன்முறைச் செயல்கள் நடைபெறுகிற அளவுக்கு நிலைமை போயிருக்கலாம். ஆனால்,

மொத்தத்தில் பார்த்தால் கடந்த நாலைந்து ஆண்டுகளாகத் தொழில் தகராறுகள் பெரும்பாலும் பேசியே தீர்க்கப் பட்டிருக்கின்றன.

பெரியவர், அன்புக்குரிய மணலி கந்தசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள்—'அன்புக்குரிய' என்றுசொல்லுவதால் யாரும் சந்தேகப்பட வேண்டாம்—அவர்கள் என்னுடைய அன்புக்கும், மதிப்புக்கும் கூட உரியவர்கள்.

அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். அவர்களுடைய வயதுக்குமேல் ஆவேச உணர்ச்சியோடு, 'அந்தத் தலைவர்களுடைய அரசியலை வெறுக்கிறேன் ; ஆனால், அப்படி அவர்கள் அடிபட்டதை எல்லாம் கண்டிக்காமல் இருக்க முடியாது' என்று சொன்னார்கள்.

எந்தக் காரணத்திற்காக, யார் அடிபட்டாலும் காய முற்றாலும், அதற்காக வருந்தாத எஃகு உள்ளம்—கல் மனம் நம்மில் யாருக்கும் இல்லை. நம் தமிழ்நாட்டின் அரசியலில் அதைத்தான் நாம் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். யார்யார்அடிபட்டார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள்.

ஆனால், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு சுந்தரம் அவர்களை விட்டுவிட்டார்கள். அதைச் சொன்னால் அவர்களுடைய கட்சியைப்பற்றிச் சொல்வதாக வந்துவிடும் என்று அவர்கள் விட்டுவிட்டார்களோ என்னவோ ?

நான் அதை விட்டுவிட்டால் அவர்கள் ஒருவேளை கோபித்துக் கொள்ளக்கூடும் என்று அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவருக்கும் சேர்ந்து நான் வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

அதே நேரத்தில் பெரியவர் மணலி போன்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 54 தொழிலாளர்கள், தொழிலாளர்களாலேயே தாக்கப்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் பெரியவருடைய வார்த்தையில் இரு புறத்திலும் அனுதாபம் பிறந்திருக்கிறது என்று மகிழ்ந்திருக்கக்கூடும்.

ஒருவேளை நேரம் போதாத காரணத்தால் அவசரத்திலே அவர்கள் விட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேனே அல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்களானாலும், கம்யூனிஸ்ட் தொழிலாளர்களானாலும், காங்கிரஸ் தொழிலாளர்களானாலும் வேறு எந்தக்

கட்சியைச் சார்ந்த தொழிலாளர்களானாலும் அவர்களுக்காக அனுதாபப்படக்கூடிய பரந்த மனம் படைத்த தொழிற் சங்கத் தலைவர்தான் திரு மணலி கந்தசாமி என்பதை நன்றாக அறிவேன்.

அவர்களிடத்திலே எனக்கு ஒரு தனி மரியாதை உண்டு. எனக்கு மட்டுமல்ல. பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக்கூட அவர்களிடத்திலே ஒரு நல்ல மதிப்பும், மரியாதையும் உண்டு. ஏன் அந்த மரியாதை, மதிப்பு வைத்து இருக்கிறோம் என்றால்—அவர் பேசும் போது சொன்னார்—'திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஆயிரம் குற்றங்கள் இருந்தாலும் நாங்கள் காமராஜரோடோ அல்லது இராஜாஜியோடோ என்றைக்குமே சேர்ந்துவிட மாட்டோம்' என்று.

அவர் அப்படிச் சொன்னது எங்களுக்கு உறுதி மொழி அளிப்பது மாதிரி இருந்தாலும், அவர்கள் கட்சியில் இருக்கும் பிளவு மனப்பான்மைக்கு விட்ட ஓர் எச்சரிக்கை என்றும் அதை நான் நினைக்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு தூய உள்ளம் அவருக்கு இருக்கிற காரணத்தால்தான், அவர்களிடத்திலே எங்களுக்கு என்றைக் குமே ஒரு தனி மரியாதையும் மதிப்பும் உண்டு.

ஆகவே, தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட வேண்டு மென்ற அளவில் இந்த அரசு தங்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் மூலம் மெய்ப்பித்துக் காட்டி வருகிறது. அதற்கு ஏற்பத் தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த அர சோடு மேலும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன், அந்த யூனியனின் தலைவர் தொழிலாளியாக இருக்க வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் கருத் தைப்பற்றிப் பல தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இப்போதே உடனடியாகப் பதில் சொல்ல விரும்பாமல், அந்தத் தலைவர்களின் கருத்துக்களைப் புறக்கணிக்கக் கருதா மல் அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவை களை ஆராய்ந்து, அடுத்து நடைபெற இருக்கின்ற சட்டமன்றக் கூட்டத்தில்—நம்முடைய நிதி நிலை அறிக்கை விவாதிக்கப் படுகின்ற கூட்டத்தில், அதுபற்றிப் பேசலாம் என்று கருது கிறேன்.

ஆகவே, எல்லாருடைய கருத்துக்களையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அதுபற்றிப் பிறகு மீண்டும் ஒருமுறை விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சேலம் இரும்பாலைத் திட்டம்

சேலம் இரும்பாலையைப் பற்றி எல்லாக் கட்சியின் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை இவ்வளவு தாமதப்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்று கேட்டார்கள். தேர்தல் காலத்தில் சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள் என்று சொன்னார்கள் திரு பொன்னப்ப நாடார் அவர்கள்.

சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் விழா நடத்துகிறபோது, தேர்தல் வரும் என்று ஜாடையாகக் கூடத் தெரியாது. இது எல்லாம் அவர்களுடைய பழைய வழக்கம். திருச்சிக்கு அருகேயுள்ள திருமானூரில் பெரிய பாலம் ஒன்று கட்டுவதற்காகத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்போதிருந்த முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் திருமதி இந்திரா காந்திக்குத் தந்தி கொடுத்து, சாங்ஷன் வாங்கி அடிக்கல் போட்டார்கள். அடிக்கல் அப்படியே இருந்தது.

அந்தப் பக்கமாகப் போன சில பேர், இது ஏதோ காளியோ, மாரியம்மனோ என்று கருதி, அதற்கு மஞ்சள் பூசி, பொட்டு வைத்து, தேங்காய் உடைத்த பிறகுதான், ஆஹா, இது அடிக்கல், இது தேர்தல் நேரத்திற்காகப் போடப்பட்டு இருக்கலாம் என்று விஷயம் புரிந்தது. அந்தப் பாலம் கட்டப்படாமலேயே இருந்தது. இப்படி நீங்கள் செய்யத் தவறியதையெல்லாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது.

சேலம் இரும்பாலையைப் பொறுத்த வரையில், அது ரூ. 300 கோடிக்கு நடைபெற வேண்டுமென்ற வாதத்தில் நாம் எப்போதும் பின்வாங்கியது இல்லை. அதிலிருந்து பின் வாங்கப் போவதுமில்லை.

நாம் மகிழ்ச்சியடையத்தக்க அளவுக்கு விரைவில் அந்தத் திட்டம் நாம் கோருகிற வகையில் தொடங்கப்படவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அரசு விளம்பரங்கள்

சில குறைபாடுகள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டன. பத்திரிகைகள் எல்லாம் மிரட்டப்படுகின்றன. பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் எல்லாம் கொடுக்கப்படுவதில்லை. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்குத்தான் தரப்படுகின்றன என்ற செய்திகளெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டன.

ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் விளம்பரங்கள் கொடுப்பது என்ற முறையில் இந்த அரசு நடந்து கொள்ள வில்லை. 'தமிழரசு' பத்திரிகையில் குத்தகை, ஒப்பந்தம் ஆகிய விளம்பரங்கள் வரும் என்று அறிவித்து அரசு ஆணை பிறப்பித்த அதே நேரத்திலே அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் சில அவசர நிலையை ஒட்டி வேறு பத்திரிகைகளிலும் வெளியிடலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

அதற்கொப்ப, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் மாத்திரம் 200-க்கு மேற்பட்ட விளம்பரங்கள்—திரு ஹண்டே அவர்கள் எடுத்துக் காட்டியது போல—தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிகையான 'முரசொலி'க்கு 90 விளம்பரங்களும், 'இந்து' பத்திரிகைக்கு 115 விளம்பரங்களும், 'மெயில்' பத்திரிகைக்கு 150 விளம்பரங்களும், 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகைக்கு 50-க்கு மேற்பட்ட விளம்பரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் அந்த விளம்பரங்கள் தரப்படவில்லை என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**திரு ஹண்டே :** முரசொலியின் தரமும்—நவசக்தி, நாத்திகம் போன்றவற்றின் தரமும் ஒன்று என்று நான் நினைக்கிறேன். என்னைத் தாக்கிய முரசொலிக்கு விளம்பரம்; அரசாங்கத்தைத் தாக்கும் பத்திரிகைகளுக்கு ஏன் விளம்பரம் தரக் கூடாது?

**முதல்வர் கலைஞர் :** தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில் இந்து ஆகிய பத்திரிகைகள் கூடத்தான் அரசாங்கத்தை விமர்சனம் செய்கின்றன. விமர்சனம் என்பதற்கு அர்த்தம் புரியாமல் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு ஹண்டே:** நான் தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டேன். சட்ட மன்றத்தில் பேசியவற்றுக்காக நான் உளறுவாயன் என அழைக்கப்பட்டேன், முரசொலி நடக்கும் விதம் அது. அது, எனது தொகுதி வாக்காளரையும் தாக்கியது.

அப்படி என்னைத் தாக்கிய பத்திரிகைகளுக்கு விளம்பரம்; அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் மற்றப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் இல்லையா? நேரடியான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

முதல்வர் கலைஞர்: ஒருவரை விமர்சனம் செய்வதற்கும், அவதூறாகச் செய்திகளை வெளியிடுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. பத்திரிகைக்காரர்கள் மிரட்டப்படுகிறார்கள்; பழிவாங்கப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே மாத்திரமல்ல, காங்கிரஸ் கட்சி செயற் குழு கூட அப்படித் தீர்மானம் போட்டு இருப்பதாக அறிகிறேன்.

ஆனால், அரசாங்கத்தை, அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதுகிற எந்தப் பத்திரிகை மீது இந்த அரசு வழக்குப் போட்டு இருக்கிறது? அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதாமல், அவதூறான விஷயங்களை எழுதுகிற நேரத்தில், அதற்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது, நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் தங்களை நிரபராதிகள் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார்கள்.

ஆகவேதான், முதலிலே 'நவசக்தி' பத்திரிகை மீது வழக்குப் போடப்பட்டது—1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில். அப்போது நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன். மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறவர்கள் எல்லாம் தலையிலே ஹெல்மெட் போட்டுக் கொள்ள வேண்டும். அதைப் பற்றிப் பொது மக்கள் அபிப்பிராயம் என்ன என்று அறிந்து, பல மருத்துவர்கள் சொன்ன யோசனையின் பேரில்-ஹெல்மெட் போட்டுக் கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டால் தலையில் அடிபட்டால்கூட —உயிருக்கு ஆபத்து இருக்காது என்பதை உணர்ந்து, பொது மக்கள் அபிப்பிராயம் அறிய ஓர் அறிக்கை விடப்பட்டது.

அந்தப் பத்திரிகைக்காரர்கள் என்ன எழுதினார்கள் தெரியுமா? குல்லாய் போடுகிறார் கருணாநிதி என்று எழுதி, யாரோ ஹெல்மெட் விற்பவனுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுப்பதற்காக இப்படி மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் எல்லாம் ஹெல்மெட் போட வேண்டுமென்று சொல்கிறார் கருணாநிதி என்று எழுதப்பட்டது. அதை எதிர்த்துத்தான் வழக்காடி, அந்த வழக்கிலே அதை எழுதிய அதனுடைய ஆசிரியருக்கும் அதனுடைய உரிமையாளருக்கும் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டு, அதை அவர்கள் கட்டியிருக்கும் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

அதைப் போலவே இன்னொரு பத்திரிகை, இவர்கள் சந்தித்தால் எனும் தலைப்பில் ஆபாசக் கற்பனை செய்து எழுதியதன் காரணமாக வழக்கு நடத்தி—'ஜெயக்கொடி' பத்திரிகைமீது—பத்திரிகை ஆசிரியருக்கு 3 திங்கள் சாதாரணச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தலைமை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். உயர் நீதி மன்றத்திலும் அது உறுதி செய்யப்பட்டது.

'தமிழ்நாட்டைப் பங்கு போடுகிறார்கள் தி.மு.க. மந்திரிகள்' என்று ஒரு செய்தி வந்தது. அதை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டு அந்தச் செய்திக்குத் தீர்ப்பளித்தார்கள். அமைச்சர்கள் வழக்கு மன்றத்துக்குச் செல்ல நேரிட்டது. அதிலும் பத்திரிகையாளர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

அதற்குப் பிறகும், ஏமாந்த மக்களைக் கற்பழிக்க களவாட, குடித்துவிட்டுக் கும்மாளம் போட அவர்களுக்கு வாக்களித்துவிட்டார்கள் என்ற தலைப்பிலே ஒரு பகிரங்கமான செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டு இருந்தது, அதுவும் அதே 'ஜெயக்கொடி' பத்திரிக்கைதான், அதன் மீது வழக்குப் போடப்பட்டு அதன் ஆசிரியர் தண்டிக்கப்பட்டார்.

பிறகு 'நாத்திகம்' பத்திரிகையில் மந்திரிகள் சொத்துக் கணக்கு என்கிற தலைப்பில் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்றை எழுதினார்கள். வழக்குப் போடப்பட்டு 3 திங்கள் சாதாரணச் சிறைத் தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் விதித்து செஷன்ஸ் நீதிமன்றத்திலும் உயர் நீதி மன்றத்திலும் தீர்ப்பு அளித்தார்கள்.

பிறகு அதே 'நாத்திகம்' பத்திரிகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் டாக்டர்கள் எமதர்பார்! சவக்கிடங்கில் சேர்க்கப்பட்ட பெண்மணி பிரசவித்தாள் என்ற தவறான செய்திகளை வெளியிட்டது. அதற்கு வழக்குத் தொடரப்பட்டு, 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று செஷன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்து உயர் நீதிமன்றமும் அதனை உறுதி செய்தது.

இப்படியே பல அவதூறான விஷயங்கள். இப்படி 9 தடவை வழக்குப் போடப்பட்டது.

ஒவ்வொரு வழக்கிலும் அபராதம் கட்டினார்கள். அல்லது சிறை சென்றார்கள். அல்லது மன்னிப்புக் கேட்டார்கள்; என்கின்ற அளவுக்குப் பத்திரிகை ஆசிரியர்கள் மீது வழக்குப் போடப்பட்டது. அல்லாமல், இந்த அரசாங்கத்தின் தேசிய

உடைமைக் கொள்கை தவறானது என்று அரசாங்கத்தின் பக்கமோ, அல்லது அமைச்சர்களின் பக்கமே அல்லது எங்களுடைய பேச்சுக்களை விமர்சித்தார்கள் என்பதற்காக யார் மீதும் எந்த வழக்கும் போட வில்லை. ஆனால் அவதூறான செய்திகளை வேண்டுமென்றே வெளியிட்ட பத்திரிகைகள் மீது வழக்குகள் போடப்பட்டன.

திரு ஹண்டே அவர்களைப் பற்றி முரசொலியில் ஊளறு வாயன் என்று எழுதியிருந்தால் நான் ஊளறுவாயன் இல்லை, நன்றாகப் பேசக்கூடியவன் என்று முரசொலியின் மீது வழக்குப் போடலாம்.

அடுத்தது கோவை மில்களைத் திறப்பது பற்றிய பிரச்சினை. இங்கு அதைப் பற்றி அக்கறை உள்ளவர்களால் பேசப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய பெரிய பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். கோவை மில்களைத் திறப்பது தொழிலாளர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்ப.......

திரு ஹண்டே: ஆளுங்கட்சிக்கு மட்டுமே விளம்பரம் கொடுப்பது ஏன்?

முதல்வர் கலைஞர்: விளம்பரங்கள் கொடுப்பது அரசாங்கத்தின் முடிவுதான்.


(மீண்டும் திரு ஹண்டே பேச எழுந்தார். அவைத் தலைவர் அவரை அமரும்படி கூறினார்.)

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது, போன்ற பெரிய பிரச்சினைகளைப்பற்றிக் கவனிக்கின்ற பெரியவர்கள் பல பேர் இங்கே இருக்கிறார்கள்.

### யானை வேட்டைக்குச் சென்றோர் முயல் வேட்டையாடமாட்டார்

அவர்கள் எல்லாம் யானை வேட்டைக்குச் செல்கிற நேரத்தில் முயல் வேட்டை ஆட மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எழுப்பி யிருக்கின்ற குறிக்கோள்களில் ஒன்று, மூடிய ஆலைகளைப் பற்றிய பிரச்சினை ஆகும்.

ஒரு முறை அந்தத் தொடர்புடைய ஓர் அமைச்சர் 'நீங்கள் விமானம் ஏறுவதற்கு முன்பாக 3 மணிக்கே இந்த உத்தரவு போட்டு உங்களுக்கு நான் அனுப்புகிறேன்'




என்று கூடச் சொன்னார்கள். விமானம் தான் வந்தது. உத்தரவு இது வரை வரவில்லை.

இப்போது மூடப்பட்ட 6 ஆலைகளை எடுத்துத் திறந்து நடத்தவேண்டுமானால், சோம சுந்தரா மில்லில் நடைமுறை மூலதனம் 26.30 லட்சம் ரூபாய், அதை நவீன இயந்திர மயம் ஆக்குவதற்கு ரூ. 28.50 லட்சம்.

காளீஸ்வரர் மில்ஸ் 32 லட்சம், நடைமுறை மூலதனம் நவீன இயந்திர மயமாக்க ரூ. 27 லட்சம்.

கோயமுத்தூர் மில்லுக்கு 60 லட்சம். நடைமுறை மூலதனம், நவீன இயந்திர மயம் ஆக்குவதற்கு ரூ. 80 லட்சம்.

ஆக மொத்தம் நடை முறை மூலதனம் 118 லட்சம் ரூபாய்.

நவீன இயந்திரமயம் ஆக்க ரூ. 132 லட்சம் தேவைப் படுகிறது.

மாநில அரசு இந்த 3 மில்களைத் திறக்க நம்முடைய சதவிகிதம் 49 : 51 என்பதில் 49 என்கின்ற பங்கு நாம் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று மாநில அரசின் சார்பாகச் சம்மதம் கொடுத்திருக்கிறோம்.

சோமசுந்தரா ஆலை இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று மத்திய அரசு கூறுகிறது. மற்ற இரண்டு மில்களின் இயந்திரங்களின் மதிப்பீட்டுக்கு முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய அரசு நமக்குக் கூறியிருக்கிறது.

அடுத்து 3 மில்கள். பங்கஜா மில் நடை முறை மூலதனம் ரூ. 26 லட்சம் தேவை. பாலமலை ரங்கநாதர் மில்லுக்கு நடைமுறை மூலதனம் 8·62 லட்சம் தேவை. இவைகளை அவசரச் சட்டத்தின் கீழ் எடுக்க மத்திய அரசாலே நடப் பதற்குக் காரணம் இருக்கிறது. ஆகவே உயர் நீதி மன்றத் திலே அந்த வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த மில்களைப் பற்றிய (லிக்விடேஷன் செய்ய) உயர்நீதி மன்றத்தின் உத்தரவு பெறப்படும். அதற்குப் பிறகுதான் எடுத்துக் கொள்ளலாம்.

செங்கோட்டையில் இருக்கிற பலராம வர்மா டெக்ஸ் டைல் மில்லின் நடைமுறை மூலதனம் 9·40 லட்சம் ரூபாய். இதை நவீன இயந்திர மயமாக்க ரூ. 30.25 லட்சம், நம்முடைய பங்கை நாம் செலுத்தத் தயார் என்று சொல்லி விட்டோம். ஆனால், அவர்கள் செலுத்தா விட்டால் 2·3 கோடி பணம் போனால் போகிறதென்று மாநில அரசு எடுத்து நடத்துங்களேன் என்று சொல்லத்தான் நமது திரு தங்கமணி அவர்களின் உதடுகள் துடிக்கின்றன என்பது எனக்குப் புரிகிறது.

ஆனால் அந்த அளவுக்கு நிதி வசதி இருக்கிறதா என்பது ஒன்று. நிதி வசதி இருந்தாலும் மத்திய அரசு அனுமதி யில்லாமல் செய்ய முடியுமா என்பது ஒன்று. இன்றைக்கு இருக்கிற ஐ. டி. ஆர். ஆக்ட்படி மத்திய அரசு அதை ஏற்று மாநில அரசுக்கு அனுமதி கொடுத்தால்தான் நம்மால் எடுத்து நடத்த முடியும்.

இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினை அந்த அளவுக்கு, முக்கால் பகுதிக்கு மேல் மத்திய அரசு தொடர்புடைய பிரச்சினையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அந்தக் காரணத்திற்காக அவர்கள்

எடுத்துக் காட்டியதைப் போல் கோவையில் இருக்கும் கட்சிச் சார்பற்ற எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஒரு கிளர்ச்சியிலே ஈடுபட வேண்டும் என்கிற போர்க் கொடியை உயர்த்த இருக்கிறார்கள்.

அது ஓர் அறப்போர்தான் என்றும், அது அமைதியான போர்க்கொடி என்றும் நான் குறிப்பிடலாம். ஆனால், இந்தப் போர்க் கொடி உயர்த்துவதற்கு முன்பாக மத்திய அரசு, ஒரு நல்ல செய்தியை மாநில அரசின் மூலமாக கோவை மில் தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கும் என நான் நம்புகிறேன்.

அதை மத்திய அரசு உடனடியாகச் செய்யவேண்டும் என இந்த மன்றத்தின் சார்பாகவும் தொழிற்சங்கத் தலைவர்கள் சார்பாகவும் இங்கே இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சார்பாகவும் மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

### விலைவாசி ஏற்றமும் வாங்கும் சக்தியும்

விலைவாசியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. விலைவாசி எல்லாப் பொருட்களுக்கும் உயர்ந்துவிடவில்லை. விலைவாசியினுடைய உயர்வு அல்லது தாழ்வு என்கிற புள்ளி விவரங்களையெல்லாம் நான் வைத்திருக்கிறேன். என்றாலும், அவைகளை இங்கு விவரமாக எடுத்துச்சொல்வதற்குநேரமில்லை என்று கருதுகிறேன். ஆகவே அடுத்த கூட்டத்தொடரில் விலைவாசிகளைப் பற்றி நான் எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

உதாரணமாக மிளகாய், புளி, எண்ணெய்—தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்—போன்ற பொருட்களுக்கு விலை நல்ல அளவுக்கு இன்றைக்குக் குறைந்து இருக்கிறது.

அரிசியின் விலையும் குறையத் தொடங்கியிருக்கிறது. நாம் அரிசியே கிடைக்காத ஒரு காலத்தில் வாழ்ந்து இப்பொழுது, அரிசி கிடைக்கின்ற ஒரு காலத்திற்கு வந்திருந்தாலும், அதிலே ஏற்பட்ட சில நிலவரங்களின் காரணமாக அரிசி விலை உயர்ந்திருக்கிறது. என்றாலும் அது வெகு விரைவிலே, பிப்ரவரியிலே, அரிசியின் விலை வீழ்ச்சியடையும் என்ற ஒரு நல்ல செய்தியை நாம் காண முடியும். சில பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ரூபாய் இருந்தது போன ஆண்டு. இந்த ஆண்டு 3 ரூபாய் என்று ஆகிவிட்டதை மாத்திரம் நாம் கணக்கிலே வைத்துக்

கொள்ளக்கூடாது. இரண்டு ரூபாய் மூன்று ரூபாயாகி விட்டது என்று அந்தப் புள்ளி விவரத்தைச் சொல்கிறீர்கள். அதே நேரத்தில் பணப் புழக்கம் எந்த அளவுக்கு ஆகியிருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், அந்தப் பணப் புழக்கம் சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கிறதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் ஆனது பெரிதல்ல. அந்த மூன்று ரூபாயைக் கொடுத்துப் பொருளை வாங்கக் கூடிய அளவுக்கு வாங்கும் சக்தி நமக்கு ஏற்படுமேயானால், இரண்டு ரூபாய் மூன்று ரூபாயானாலும், மூன்று ரூபாய் நான்கு ரூபாயானாலும் கவலையில்லை.

இன்றைக்கு வெளி நாடுகளுக்குச் செல்கிறோம். அங்கே செல்கின்ற நேரத்தில்,அங்கே டாக்சி ஓட்டுகின்ற டிரைவரைப் பார்த்து 'உன்னுடைய சம்பளம் என்ன' என்றால் அவர் தருகின்ற டாலர் கணக்கையோ பவுன் கணக்கையோ பார்த்தால், நம்முடைய ரூபாய்க் கணக்கில் 3,000 ரூபாய் சம்பளமாகக் கிடைக்கிறது. ஆகா, 3,000 என்று எண்ணுகிற நேரத்தில் உன்னுடைய வீட்டு வாடகை என்ன என்றால் 1,000 ரூபாய் என்கிற அளவுக்குக் கணக்குச் சொல்கிறார்கள்.

ஆகவேதான் வாங்குகிற சக்தி, பணப் புழக்கம் இவைகளை மனத்திலே வைத்துக் கொண்டு விலைவாசியின் உயர்வை நாம் கணக்கிட வேண்டும் என்கிறேன்.

இரண்டு மூன்றாகிவிட்டது அல்லது மூன்று ஐந்தாகி விட்டது என்று சொல்கிற நேரத்தில் அதை வாங்குவதற்கு வாங்கும் சக்தி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அந்த அளவுக்குப் பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அது சாதாரண ஏழை எளிய மக்களை முழுமையும் போய்ச் சேர்கின்ற அளவுக்கு அது ஏற்படவில்லை. அப்படி ஏற்பட வேண்டுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் போக நல்ல தொழில்களை உருவாக்குவதற்கு மத்திய அரசு மாநில அரசுகளுடைய கோரிக்கைகளைத் தாமதமில்லாமல் நிறைவேற்ற வேண்டும்.

## வேலை வாய்ப்பு

மாநில அரசின் கோரிக்கைகள் தாமதப் படுகின்ற காரணத்தாலேதான் நல்ல வேலை வாய்ப்புகளை,—நாம் இளைஞர் அணியிலே 2,000 பேர், ஆசிரியர்கள் என்ற பெயரில் 6,000

பேர், புதிய போலீஸ்காரர்கள் என்ற பெயரில் 2,000 பேர் என்று ஆயிரக்கணக்கிலே வேலைவாய்ப்புகளை அளித்தாலும் லட்சக் கணக்கிலே இன்றைக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்ற பேருண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஆகவே தொழில் துறையிலே மாநில அரசுகள் இன்னும் கொஞ்சம் கைகளிலே இருக்கின்ற கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு வேகமாக நடைபோட வேண்டும். அப்படி வேகமாக மாநில அரசுகள் செயல் பட வேண்டும் என்பதற்காகத் தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமை கொண்டிருக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம் கேட்கிறார்கள்.

## மொத்தத் தலைப்பு

நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் என்ன என்ன அதிகாரங்கள் என்று தொகுத்துச் சொல்லும் போது ஒவ்வொரு அதிகாரப் பட்டியலையும் ஒரே நேரத்தில் சொல்வதற்கு இயலாத காரணத்தினால் மொத்தமாகத் தலைப்பிட்டு மாநில சுயாட்சி என்று கேட்கின்றோம்.

இந்த மாநில சுயாட்சி இந்தியாவிலே யிருந்து தமிழ் நாட்டைப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் எழுந்தது அல்ல. இன்றைக்கு ஆகா, மாநில சுயாட்சி கேட்கலாமா, பார், பார், விட்டேனா என்றெல்லாம் பல பேர் சவால் விடுகின்றார்கள், நான் அவர்களுக்குச் சொல்கின்றேன். அவர்களெல்லாம் இணைந்திருந்த போது, 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் பிரகடனத்தில் சொல்லி இருக்கிறோம்:

'' இந்திய அரசியல் முறை கூட்டாட்சி முறை என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிகமாகச் சாய்ந்து இருப்பதால் அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும், மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால் அதே நேரத்தில் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியாவாக இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்து விட்டு இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப் படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

அரசியல் துறை அதிகாரங்களும் நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டும் என்ற ஆசையில் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்.''

இது 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாகும். அரசியல் சட்டம் அதற்காகத் திருத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையினை உள்ளடக்கிய தேர்தல் பிரகடனமாகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தேர்தல் அறிக்கை கூட நாட்டின் அடிப்படை ஒற்றுமைக்கு உள்ளடங்கிய வகையில் —மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வரும் விதத்தில் அரசியல் சட்டத்திலுள்ள மத்திய—மாநில உறவுகள் பற்றிய பிரிவைத் திருத்திட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

இதையேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நாம் அப்பொழுதே வெளியிட்டிருக்கிறோம். அதே நேரத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும்,''மைய-மாநில அரசுகளின் துறைகள் பட்டியல் விவரமாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் உண்மையான அதிகாரம் மத்திய அரசின் கையிலேதான் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகளின் உத்தரவுகள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றே அமல்படுத்தப்படவேண்டியிருப்பதால் உண்மையான மதிப்புக் கிடையாது. பொருளாதாரச் சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில அரசு மத்திய அரசிடம் கையேந்தும் நிலை இருக்கிறது. பொருளாதாரத் திட்டங்களும், வேளாண்மைத் திட்டங்களும் மத்திய அரசின் தயவை எதிர்பார்த்தே நடக்க வேண்டியிருக்கின்றன.''

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போது மத்தியில் குவிந்திருக்கும் ஏராளமான அதிகாரக் குவியல் மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளைப்பறித்து ஒரு போலீஸ் ஆட்சியை உருவாக்கும் ஒரு பயங்கரமானநிலை உருவாகும் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை செய்கின்றது என்கிற அளவில் மார்க்சிஸ்ட்டுகள் தமது தேர்தல் அறிக்கையைத் தொடங்கி இப்படி முடித்திருக்கின்றார்கள்.

## மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

அதைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1967 மார்ச் திங்கள் 19-ஆம் தேதி வெளியிட்ட கருத்துக்களை அப்பொழுது 'கல்கி' பத்திரிகையிலே தலையங்கமாக எழுதியிருக்கிறார்கள். தலைப்பே 'உண்மை சமஷ்டி வருக வருகவே' என்பது. அதிலே எழுதியிருக்கிறார்கள்: திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஒரு பிரதேசத்திற்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில், அதற்கு முக்கியத்துவம் இல்லை என்றும் மேலெழுந்த வாரியாகச் சிலர் நினைத்துவிடலாம். அவர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படையை இராஜாஜி அவர்களே தெளிவு செய்திருக்கிறார். அதாவது:—

''எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்ற அகில இந்தியப் பிரச்சினையையே திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப்படையாகக் கொண்டது.

''ஒரே சர்க்கார் நாடு முழுதும் ஆள்வதை யூனிடரி முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை (பெடரல்) சமஷ்டி முறை என்றும் சொல்லுவார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுகிறது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகர சபையின் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

''இந்தியா போன்ற பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புக்களை மத்தியிலே மாத்திரம் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேர்கிறது.

''இப்படிப்பட்ட ஆட்சிக்குத் தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பு உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினைக் கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியாகும்'' இது 19—3—67ல் அறிஞர் அண்ணா அவர்களுடைய முகப்புப் படத்தைத் தாங்கிய கல்கி இதழில் வெளிவந்தது.

அது மாத்திரமல்ல. இன்னும்கூடத் தீவிரமாக இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி அப்பொழுது 'நம்நாடு' பத்திரிகையில் எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்கிறார், ''பாரத சர்க்காருக்கே எல்லாப் பலமும் அதிகாரமும் ரத்த ஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்

திற்குப் பாதகம் விளைவிக்கும். திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன்முன்னேற்றத்தை முக்கியமாகக் கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்றால் உடனே ஜாதித் துவேஷம், பிராமணத் துவேஷம் என்று எண்ணத் தோன்றும். அதற்குக் காரணங்களை ஆராயத் தேவையில்லை. ஆகவே, திராவிடத்தை, ஜனகணமன என்ற பாட்டில் சொல்லப்பட்ட திராவிடத்தைக், கவனித்துக் காத்துவருவோமாக. இதை, ஜாதி துவேஷக் கூட்டத்தாருக்கு மானியமாக விட்டு விடாமல் எல்லாரும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும்'' என்று இராஜாஜி அவர்கள் திராவிடத்திற்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இவ்வாறு கட்சி ஒன்றாக இருக்கும் போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்வேண்டும் என்றும் கூட்டணியிலேயிருந்து பிரிந்துபோன பிறகு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டியதில்லை என்றும் கூறுவது கட்சியின் பொதுக் கொள்கைக்குக் கேடு அளிக்கின்ற செயலாகும்.

''ஒன்றாக இருந்தீர்கள். சொன்னேன்'' என்றால் அப்படிச் சொல்லப்படுகின்ற கொள்கைகளுக்கு எந்த விதமான மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடும்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் தலைமை நீதிபதி திரு கே. சுப்பாராவ் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு கே. சந்தானம் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாட் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சுதந்திராக் கட்சியின் ஒரிசா முதல்வர் சிங் தேவ் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு காமராஜ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று டாக்டர் ஆர். சி. கூப்பர் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; மாநில சுயாட்சி வேண்டும் என்று திரு பி. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச்சொன்ன ஆதாரங்களை, சுதந்திராக் கட்சியின் நண்பராக இருக்கிற திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னால் சொல்லி இருக்கிறார்கள்.

முன்பு ஒன்றாக இருந்த போது அது. இப்போது இல்லை என்றார்களே! இப்போதும் திரு சாமிநாதன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திருமதி அனந்தநாயகி :** மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. அதற்காக இவ்வளவு ஆதாரங்களைத் தேடிக் கொண்டு வந்து பேசியிருக்கவேண்டியதில்லை. ஆனால், அது பிரிவினையில் கொண்டு போய் விட்டுவிடக் கூடிய அளவில் இருக்கக் கூடாது என்பதைத் தான் சொல்கிறோம். உங்களுடைய மாநாட்டு வரவேற்பிலே உள்ள செய்தி அப்படி இருக்கிறது.

**முதல்வர் கலைஞர் :** இவ்வளவு சுலபமாகப் புரியும் என்றிருந்தால், நான் வேலை மெனக்கெட்டுப் போய் இவ்வளவு ஆதாரங்களையும் தேடிக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லைதான். (பலத்த சிரிப்பு.)

### மாநில சுயாட்சியும் மாநிலப் பிரிவினையும்

ஆனால் திருமணம் என்று சொன்னவுடன் குழந்தை பிறந்து விடுமே; குழந்தை பிறந்தால் தாயின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமே; தாயின் உயிர் போய்விடுமே என்று நினைத்துக் கொண்டிருந்தால் நாட்டில் திருமணமே நடைபெறாது போய்விடும். அதைப் போலத்தான் மாநில சுயாட்சி என்று சொன்னவுடனே மாநிலப் பிரிவினை கேட்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்.

எவ்வாறு திருமணம் என்றவுடன், குழந்தை பிறந்து விடும்; குழந்தை பிறந்து விட்டால் தாயின் உயிர் போய் விடும் என்ற பயம் ஏற்படுகிறதோ, அதைப் போலத்தான் மாநில சுயாட்சி என்றதும், பிரிவினை ஏற்பட்டுவிடும்; இந்தியா உடைந்து விடும்; சின்னாபின்னமடைந்து விடும் என்று நினைப்பதும் என்பதைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இன்றைக்கு, இந்தியா பலவீனப்படக் கூடாது; இந்தியா சிதறிவிடக் கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். திராவிட நாடு பிரிவினை கேட்ட நேரத்திலே, எங்களை யார் யார் எதிர்த்தார்களோ, எங்கள் மீது யார் யார் குற்றஞ் சாட்டினார்களோ அவர்களை எல்லாம் விட இன்றைக்கு நாங்கள் ஒருபடி மேலே சென்றிருக்கிறோம் என்பதைச் சந்தேகவாதிகளுக்கு விளக்கிட விழைகின்றேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், 1969-ஆம் ஆண்டு எங்களையெல்லாம் ஆளாக்கி விட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்துவிட்ட நேரம்—அண்ணா அவர்களைப் பிரிந்து ஆறாத் துயரில் நாங்கள் எல்லாம் மூழ்கியிருந்த நேரம் நாடு நெருக்கடியான நிலையில் இருந்தது.

## மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி

எங்களுக்குப் பிரிவினை எண்ணம் இருக்குமானால் அந்த நேரத்திலே நாங்கள் பிரிவினையை வலியுறுத்தி யிருப்போம். ஆனால் நாங்கள் செய்ததென்ன? திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்தால், மத்தியிலே அரசு கவிழும். அப்போது இந்தியா இருந்த நிலையில் மத்தியிலே ஆட்சி கவிழ்ந்தால், இந்தியா உடைபடும்; சிதறுண்டு சின்னா பின்னமாகும். அந்த நிலையை நாங்கள் விரும்பாததால் திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப் படுத்தினோம்.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே இருந்த சிலர், நாங்கள் திராவிட நாடு பிரிவினைக் கேட்ட போது எங்களை எதிர்த்த வர்கள், எங்கள் மீது குற்றஞ் சாட்டினவர்கள், '' திராவிட நாடு பிரிவினை கேட்டீர்களே! இப்போது இந்திரா காந்தி யின் பின்னால் ஏன் செல்கிறீர்கள்? உங்கள் கொள்கையை இப்போது வலியுறுத்துவதுதானே?'' என்று எங்களைத் தூண்டி விட்டார்கள்.

அவர்கள் தூண்டி விட்ட மாதிரி, அந்த நேரத்தில் நாங்கள் பிரிவினைக் கோரிக்கையை—திராவிட நாடு கோரிக் கையை வலியுறுத்தி யிருந்தால் இந்தியா பலவீனப்பட்டி டிருக்கும். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்திருக்கும். இந்தியப் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட் டிருக்கும். ஓர் அமைதியற்ற நிலை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக இந்தியாவே தூள்தூளாகப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரம் வலுப் பெற்றதால் இந்தியா உடைபடாமல், அமைதி குலையாமல், பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாமல் இருந்தது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் பங்கு உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிட விரும்புகிறேன்.

இதை நாங்கள் நன்றி எதிர்பார்த்துச் செய்யவில்லை. கைம்மாறு கருதி நாங்கள் இதைச் செய்யவில்லை. எங்க ளுடைய தூய நட்பின் அடிப்படையிலேதான் இதைச் செய்தோம்.

திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலு விழக்கச் செய்து, மத்திய அரசைக் கவிழ்த்து, மாநில சுயாட்சி பெறவேண்டும் என்பதல்ல கழக அரசின் நோக்கம். அப்படிப்பட்ட அரசியல் இலாபம் தேடுபவர்கள் நாங்களல்ல என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

எனவே, திருமதி இந்திரா அம்மையாரின் அரசுக்கு உறு துணையாக இருந்து, மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி பெற்று, மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற வேண்டு மென்ற இந்த வேண்டுகோளுக்கு—இந்தக் கோரிக்கைக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்குமென்ற உறுதியோடு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

## சட்ட மன்ற மேலவையில் முதல்வர்

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே !

தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் வகையில் மேலவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 29 உறுப்பினர்கள் தங்களுடைய ஆழ்ந்த கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேற்றைய தினம் நம்முடைய நண்பர் திரு சாமிநாதன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானமும் அதனை ஒட்டி ஒரு விவாதமும் நடைபெற வேண்டுமா என்று கேட்டு அதைப் பிரச்சினையாக்க நான் விரும்ப வில்லை—ஒரு கேள்விக்குறியாக எழுப்ப விரும்புகிறேன் — என்று பேசியிருக்கிறார்.

சில நேரங்களில் எந்தக் காலத்திலோ எழுப்பப் படுகின்ற கேள்விகள் பிறிதொரு காலத்தில் பதிலுக்குரிய வைகளாகின்றன என்பதனை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர், மாநிலங்களுக்கு அதிக அதி காரங்கள் வேண்டுமென்கிற கருத்தின் அடிப்படையில் இந்தக் கேள்விக் கணையைப் பூட்டியிருப்பார் என்று கருதுகிறேன்.

### மரபு காப்போம்

ஆனால், நான் அதற்கு வைக்கின்ற வாதம் எல்லாம் குடியரசுத் தலைவர் நாடாளு மன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் இரண்டும் சேர்ந்த அவர்கள் கூட்டத்தில் உரை ஆற்றிய பிறகு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்ற வகையில் குடியரசுத் தலைவர் அவர்களுடைய பேச்சுக்கு நன்றி தெரிவிக்கின்ற அந்த மரபு இப்பொழுதும் டெல்லியில் இருந்து வருகிறது. மத்திய அரசில் இருந்துவருவதுபோல் நானும் நம்முடைய ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு மரபை அனுவசியமாக இழந்து விடாமல் அதைக் கொஞ்ச காலத்திற்குக் கட்டிக் காப்பாற்றுவதுதான் முறை என்று கருதுகிறேன்.



நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் அரசினுடைய கொள்கைகளை — திட்டங்களை விமர்சிப்பதற்கு எல்லா . உறுப்பினர்களுக்கும் எல்லாக் கட்சியினுடைய தலைவர்களுக்கும் ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது என்ற நிலையில் நன்றி தெரிவிக்கும்தீர்மானத்தை ஒரு விவாதத்திற்குரியதாக்கி அனைவரும் சேர்ந்தே நன்றி தெரிவிப்பது என்ற அளவில் திருத்தங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுவது என்ற ஒரு நல்ல மரபை நாம் பெற்றிருக்கிறோம்.

அந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டும் ஆளுநர் பெருமானுடைய உரையின்மீது மேலவையில் பல கட்சிகளுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை ஒட்டி—நான், அவைகளெல்லாம் எவ்வளவு உண்மையின் அடிப்படையில் கூறப்பட்டன என்ற ஆராய்ச்சிக்குப் போக விரும்பாமல், எந்த உணர்ச்சியின் அடிப்படையில் அவை கூறப்பட்டன என்ற அளவில் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### அசைக்க முடியாதவை

நம்முடைய உறுப்பினர்கள் திரு தாமோதரன் அவர்களும் திரு சாமிநாதன் அவர்களும் ஆற்றிய உரைகளில் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டிய புள்ளி விவரங்கள் யாரும் அசைக்க முடியாதவை. உள்ளபடியே இந்த மாமன்றத்தில் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் அளவுக்கு அவை அமைந்திருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்களும் ''இன்றையத் தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தை முன்னேற்றக் கழகம் புதியதாகக் கொண்டுவரவில்லை; அதே எண்ணத்தை நாங்கள் தீர்மானமாக வடித்து எடுத்திருக்கிறோம். 1970-ஆம் ஆண்டிலேயே அப்படி ஒரு தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ்கமிட்டியிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்'' என்று எடுத்துச் சொன்னது உள்ளபடியே பாராட்டத்தக்க—வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நண்பர் திரு சாமிநாதன் மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறியது போல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கின்ற பிரச்சினை தி. மு. கழகத்திற்கு மட்டும் உரிய பிரச்சினை என்று என்றைக்கும் எடுத்துக்காட்ட விரும்பியதில்லை.

எல்லாக் கட்சியினரும் சேர்ந்து இந்த நல்லகாரியத்திலே ஈடுபட்டு இந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்களை, தேவைப்பட்ட அதிகாரங்களை நிலைத்த அதிகாரிகளைப்பெற வேண்டுமென்று வாதாட வேண்டுமென்ற கொள்கையை உடையதுதான் திராவிட முன்னேற்ற கழகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதைப் பற்றி என் பேச்சில் இறுதியாக மேலும் குறிப்பிடலாம் என்ற எண்ணத்தில் முதலிலே ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் போரில் இந்திய நாட்டினுடைய வெற்றியைக் குறித்தும் அந்த வெற்றிக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களைக் குறித்தும் பாராட்டி அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வீரர்களுக்கு உதவி

போரின் வெற்றிக்கு நாட்டினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய ஆற்றலும், பரபரப்பற்ற, பதட்டமற்ற ராஜதந்திரப் போக்கும் முக்கியமானகாரணங்கள் என்பதை ஆளுநர் பெருமான் அவரது உரையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அதைப்போலவே இந்திய மக்கள் ஓரணியில் திரண்டு நின்று, ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டு வெற்றி நடைபோட்டிருக்கிறார்கள் என்பதையும் ஆளுநர் அவர்கள் அவரது உரையில் வெற்றிக் களிப்புப் பொங்கியெழுமளவுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

போரில் வீரமரணமடைந்த போர் வீரர்களுடைய குடும்பங்களுக்கு இந்த அரசு தக்க—உரிய உதவிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று எடுத்த முடிவுக்கேற்பவும், அறிவிப்புக் கேற்பவும் செய்து வருகிறது. இந்திய மண்ணைக் காப்பாற்றுவதற்கு—எதிரிகளை வீழ்த்திவிரட்டி அடிப்பதற்கு, இதுவரையில் நமக்கு வந்திருக்கின்ற கணக்கின்படி, தமிழ் நாட்டுப் போர்வீரர்கள் 98 பேர் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள். அவர்களிலே 61 குடும்பத்தினருக்கு, அரசின் சார்பிலே ரூ. 5,000 வீதம் உடனடியாக அளிக்கப்பட்டிருக்கின்றது. மீதம் உள்ள போர் வீரர்களின் குடும்பங்களிலே அந்தப் பொருளுதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வாரிசுகள் யார் என்பது பரிசீலனையில் இருக்கின்றது என்ற காரணத்தினால், அந்த உதவிகளை அவர்களுக்கு உடனடியாகச் செய்ய முடியாத அளவிற்கு இருந்தாலும் ,விரைவில் அந்தப் பரிசீலனைகள் முடிந்து அவர்களுக்கு அந்த உதவிகளைத் தந்துவிட முடியும்—தந்துவிட வேண்டும் என்ற வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதையும் நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர் காரைக்குடி திரு சா. கணேசன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஆளுநர் அவர்களது உரையில், நடந்து முடிந்த பாகிஸ்தான் —இந்தியா யுத்தத்தினைப் பற்றித்தான் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிகிறதே அல்லாமல், இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்தது, என்னென்ன காரியங்களைச் செய்ய இருக்கின்றது என்பதெல்லாம் குறிப்பிடப்படவில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்திலும், அல்லது மாற்றார் சாதித்த சாதனைகளைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கட்டத்தில் நின்ற நேரத்திலும் இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாய சமதர்மத்தினை முன் நிலையில் வைத்து, அந்த வழியில் மக்களை அழைத்து செல்லவும், அரசு நடத்திச் செல்லவும் தயாராக உள்ளது என்ற அறைகூவலை நாட்டில் பிரகடனப்படுத்தியது.

இதைத்தான் நமது நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்களும் பேசும்பொழுது எடுத்துக் காண்பித்தார்கள். மிக முக்கியமான கொள்கைகளுக்காக—விரும்பியதை அடைய வேண்டிய பல்வேறு கோரிக்கைகளுக்காக மக்கள் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்—இந்த ஆட்சியை அரசு பீடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்கு ஏற்ற வகையில்தான், இந்த அரசு நாட்டிலுள்ள சாதாரண மக்கள், சாமானியமான மக்கள், ஏழை எளி

யவர்கள் கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகள் அவர்கள் மனம்களிக்கத் தக்க அளவிற்கு, பாட்டாளிகளும் தொழிலாளர் களும் இன்ன பிறரும் இறும்பூதெய்தத் தக்க அளவிற்குச் சட்டங்கள் பலவற்றைத் தீட்டியும் பலவற்றினை நிறை வேற்றியும் உள்ளது என்பதையும் அவைகளெல்லாம் சாதனைப் பட்டியலிலே குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் இந்த மாமன்றம் நன்கு அறியும்.

### சேலம் இரும்பாலை

சேலம் இரும்பாலை பற்றி இங்கே உறுப்பினர்களெல்லாம் பேசியிருக்கிறார்கள். சேலம் இரும்பு உருக்காலையைப் பொறுத்த வரையில் இதற்கான முயற்சிகள் நீண்ட காலமாக நடைபெற்று அண்மையிலேதான் தொடக்க விழா நடத்தி வைக்கப் பெற்று இன்னும் இந்தத் திட்டம் தொடங்கப்படாமல் இருப்பது உள்ள படியே வருந்தத்தக்க ஒன்று என்றாலும், அண்மையில் டில்லியிலே அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத் தில், ஆளுநர் அவர்கள் உரைக்குப் பிறகு நடைபெற்ற கூட்டத்தில், நம்முடைய அரசின் சார்பில் எடுத்துரைக்கப் பட்ட வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஜப்பான் நாட்டிலிருந்து வந்து, இங்கேயிருக்கின்ற கஞ்ச மலைத் தாதுவை எடுத்துச் சென்று அங்கே நாங்கள் இரும்பு உருக்காலையை நடத்த முடியும் என்று ஜப்பான் நாட்டுக் காரர்கள் துணியும்போது நாம் ஏன் துணியக்கூடாது என்ற வாதங்களை வைத்துக் கஞ்சமலைத் தாதுவை வைத்து இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற தமிழக அரசின் உறுதியான நிலையையும் இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் விரைவிலே சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கான நடவடிக் கைகள் சில மாதங்களில் ஆரம்பமாகும் என்பதற்கான அறி குறிகள் தோன்றிவிட்டன என்பதையும் நான் இந்த மன்றத் தில் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறக்க....

கோயம்புத்தூரில் மூடப்பட்டிருக்கிற ஆலைகளைப்பற்றி யெல்லாம் இங்கே எடுத்து சொல்லப்பட்டது. கோயம்புத் தூரில் ஏற்கெனவே 5 ஆலைகள் மூடப்பட்ட ஆலைகள்— தமிழக அரசின் சார்பில் ஏறத்தாழ 94 லட்ச ரூபாய் அள விற்கு இந்த ஆலைகளுக்காகப் பணம் போடப்பட்டு அவைகள் திறக்கப்பட்டன. இந்த 5 ஆலைகளுக்கு மத்திய அரசின் சார்பில் நமக்குத் தந்திருக்க வேண்டிய பாக்கி கிட்டத் தட்ட 20 லட்ச ரூபாய் இன்னும் கொடுபடாமல் இருக்கிறது. இதற் கிடையில் நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர் களும் டில்லிக்குச் சென்றபோது பலமுறை வலியுறுத்தி வந் திருக்கிறோம்.

நான் காலையிலேகூடப் பேரவையில் எடுத்துக் காட்டினேன், கோவையிலே எல்லாக் கட்சியினுடைய தொழிற்சங்கங்களும் இன்றைக்குப் போர்க்கொடி உயர்த்தி யிருக்கின்றன. ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் வேலை நிறுத்தம்—கிளர்ச்சி என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதில் முக்கால் பங்குப் பொறுப்பினை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நமக்குக கால் பங்குப் பொறுப் புத்தான்—என்றாலும் கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடவில்லை.

ஆனால் மாநில அரசு மேலும் மத்திய அரசோடு வாதாடிப் போராடி , நியாயத்தைப் பெறுவதற்கேற்றவகையில் இடை யிலே கொஞ்சம் அமைதியான முறையிலே மாநில அரசை இயங்கவிட வேண்டியதுதான் தொழிலாளர்களுடைய கடமையாகும்.

ஏனென்றால் திரு ஆறுமுகசாமி எடுத்துக் காட்டியதுபோல் இதிலே அவசரப்பட்டுக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்களானால் அதன்மூலமாக நாம் கிளர்ச்சி நடத்தினோம் என்ற அளவிற்கு ஒவ்வொரு தொழிற் சங்கத்திற்கும் இதிலே அந்தத் தொழிற் சங்கம் ஈடுபட்டது என்ற நல்ல பெயர் கிடைக்கலாம். ஆனால், இதில் பெயர் கிடைப்பதைவிடப் பலன் முக்கியம். ஆகவே அந்தப் பலனை அடைய வேண்டிய வர்கள் தொழிலாளர்கள். ஆகவேதான் மீண்டும் ஒருமுறை கோவையிலே உள்ள தொழிற் சங்கத் தலைவர்களையும், எல்லாக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும்—இதிலே திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய தலைவர்களும் கலந்திருக்கிறார்கள்—எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் கலந்திருக்கிறார்கள்—நம்முடைய திரு ஆறுமுகசாமி அவர் களின் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்களும் கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றக் கட்சிகளுடைய தொழிற் சங்கத் தலைவர்களும் எல்லாம் கலந்திருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை மத்திய அரசோடு பேசுவதற்கு நல்ல அவகாசம் மாநில அரசுக்குத் தரவேண்டும் என்று நான் அந்த தொழிற்சங்கங்களுடைய தலைவர்களை யெல்லாம் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## விலைவாசி ஏற்றமும் இறக்கமும்

விலைவாசியைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் அவர்கள் தந்த புள்ளி விவரங்களெல்லாம் தவறு—விலைவாசி நிரம்ப இறங்கி யிருக்கிறது என்றெல்லாம் வாதிட விரும்பவில்லை.




ஆனாலும், அவர்கள் எடுத்துக் க்ாட்டிய அளவிற்கு — அந்த அளவிற்கு — உயர்ந்திருக்கிறதா என்ற கேள்விக்கு நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அரிசியைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கொஞ்சம் விலை அதிகமாக இருந்தாலும் அடுத்து வருகிற சில வாரங்களில் விலை நிச்சயமாகக் குறைந்துவிடக் கூடும். நேற்றும், இன்றும், நேற்று முன்தினமும் சென்னையிலேயே அரிசி விலை நல்ல அளவிற்கு இறங்கிவிட்டிருக்கிறது என்று நமக்குச் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

மற்றப் பொருள்கள்—துவரம் பருப்பு, அது வேறு மாநிலங்களிலிருந்து வருகிற காரணத்தினால் அதனுடைய விலை கொஞ்சம் ஏற்றமாகத்தானிருக்கிறது. அதே நேரத்தில் கடலைப் பருப்புப் போன்றவைகளின் விலை மிகக் குறைந்திருக்கிறது.

சென்னையில் சென்ற ஆண்டு ஒரு கிலோ கடலைப் பருப்பு 1—70 காசுக்கு வாங்கினால் இப்போது கூட்டுறவு சொசைடியில் 1—30 காசுக்கும், தனியார் கடைகளில் 1—32 காசுக்கும் வாங்க முடியும். அதேபோல செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் சென்ற ஆண்டு 1—30, 1—39, 1—40—க்கு வாங்கியிருந்தால் இந்த ஆண்டு 1—35, 1—40, 1—39 என்ற அளவிற்குத் தான் இந்த விலைகள் இருக்கின்றன.

அதைப்போலவே தேங்காயெண்ணெய் சென்ற ஆண்டு ஒரு லிட்டர் 9 ரூபாய்க்கு விற்றது; இந்த ஆண்டு 6—90 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. வட ஆர்க்காட்டில் 9 ரூபாய் விற்றது 7—60 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தென்னார்க்காட்டில் 9—72-க்கு இருந்தது 6—50 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தேங்காயெண்ணெய் போலவே நல்லெண்

ணெய் விலையும் குறைந்திருக்கிறது. கடலையெண்ணெய் விலையும் குறைந்திருக்கிறது. மிளகாய் விலை குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு சென்னையில் கிலோ 6 ரூபாய் விற்றது, இன்று இந்த ஆண்டு 3–60 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது.

புளி சென்ற ஆண்டு சென்னையில் புதுப்புளி 2–50, பழைய புளி 3–25 என்று இருந்தது. இந்த ஆண்டு 2–19 விலைக்குத் தனியார் கடைகளிலும், கூட்டுறவுக் கடைகளில் 2 ரூபாய் என்ற அளவிற்கும் புளி விலை குறைந்திருப்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் தரப்பட்டிருக்கின்றன. சர்க்கரை விலை கூடுதலாகியிருக்கிறது என்று குறை சொல்லப்பட்டது. ஆனால் சர்க்கரை நமக்கு ஆலையிலிருந்து கிடைக்கிற நேரத்தில் ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று அவர்கள் விலை நிர்ணயித்தாலும் எக்சைஸ் டியூட்டி போன்றவைகள் 40 ரூபாய் சேர்ந்து டிரான்ஸ்போர்ட் 3 ரூபாய் சேர்த்து, ஹோல்சேல் மார்ஜின் 1-50, ரீடைல் மார்ஜின் 3 ரூபாய் சேர்த்து அட்மின்ஸ்ட்ரேஷன் சர்சார்ஜஸ் 2 ரூபாய் சேர்த்து மொத்தமாக 150 ரூபாய் என்று நமக்கு விநியோகிக்கப்படுகிற விலை 200 ரூபாய் அளவிற்கு வருகிறது. கிலோ இரண்டு ரூபாய் அளவிற்கு விற்க வேண்டுமென்று நாம் அரசின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்றாலும் அது அதிகமாகக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு மக்களிடத்தில் இருப்பதை அரசு உணர்கிறது.

300 ரூபாய் அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு 1 கிலோவும் அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 3 கிலோவும் சர்க்கரை வழங்கலாம் என்று இதுவரையில் இருந்தது. பொதுமக்களின் சங்கடத்தை உணர்ந்து இனிமேல் 300 ரூபாயும் அதற்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரை வழங்கவும்,

அதைப் போலவே அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 4 கிலோ சர்க்கரை வழங்கவும்சென்னையில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களின் நிலைமைகளுக்கேற்றவாறு ஆணை பிறப்பிப்பார்கள்—நடவடிக்கை எடுப்பார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## விலை ஏற்றத்தைத் தடுக்க

விலையேற்றத்தைத் தடுக்கப் பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கவேண்டும். அதே நேரத்தில் பணப்புழக்கம் ஏழை எளிய மக்களிடத்தில் இருந்தாக

வேண்டும். ஏழை எளிய மக்களிடத்தில் பணப் புழக்கம் இருக்க வேண்டுமென்ருல் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அதற்குப் பல தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமையவேண்டும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமைய வேண்டுமானுல் அதற்கு ஏற்ற வகையில் தொழிற்சாலைகள் ஆங்காங்கு அமைப்பதற்கு உரிய வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மாநில அளவில் உரிமைகள்

திரு தாமோதரன் அவர்கள் இங்கே சொன்னுர்கள் ஒரு தொழிற்சாலையைப் பெற எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது, அது ரத்தாகிவிட்டதா வந்ததா என்ற தகவலைப் பெறவே எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற சங்கடமான வாதத்தை இந்த மன்றத்தில் கேட்டோம்.

ஆகவேதான் இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் சரிப்படுத்த வேண்டுமானுல் நண்பர் திரு ராமனுதன் குறிப்பிட்டதைப் போல பூபாகத்தில் மத்திய அரசு ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு எல்லா இடங்களையும் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் பார்த்து நிலைமையைச் சரிப்படுத்த முடியாது. அதற்காகத்தான் மாநில அளவில் பல உரிமைகள் அந்தந்த மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு இந்த அரசின் சார்பில் 2000 பேருக்கு இளைஞர் அணியில் வேலை கொடுத்தோம். 6000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்தோம். 2000 பேரை பல அலுவல்களில் புதிய அலுவல்களை உருவாக்கிச் சேர்த்தோம். அதையெல்லாம்—நான் உணருகிறேன்—கடலில் பெருங்காயத்தைக் கரைத்தது போலத்தான். அதை நான் மறைக்க விரும்பவில்லை.

வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு இருக்கிறது. அதற்கான உதவிதான் தேவை. முழுமையாக அதை நிறைவேற்றும் அதிகாரம் இருக்கிறதா என்ருல் நிச்சயமாக இல்லை. அதற்கான வாய்ப்புகள் மாநில அரசுக்கு இருக்கிறதா என்ருல் நிச்சயமாக இல்லை. எனவேதான் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற்ருக வேண்டுமென்ற எண்ணத்தைத் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிருேம்.

அதைத்தான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெறத்தான் வேண்டுமென்று சொன்னுர்கள்.

ஆனுல், மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டுமென்று நாங்கள் சொல்கிற நேரத்தில் அது ஏதோ பிரிவினை

வாதமாக இருக்குமோ, ஏற்கெனவே திராவிடநாடு கேட்டவர்களாயிற்றே. அதையே மனத்தில் வைத்துக் கொண்டு கேட்கிறார்களோ-இது பிரிவினைக்குக் கொண்டுபோய்விடுமோ என்று எண்ணிப் பேசுவது முறையல்ல.

## கேட்டுப் பெறுவது நியாயம்

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுப் பெறுவது பிரிவினைவாதத்தை உடைப்பது; அதைத் தரமுடியாதுஎன்று மறுப்பது அத்தகைய பிரிவினைவாதத்தை வளர்ப்பது. இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இதைப் புரிந்து கொண்டால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுகிற அந்தத் தத்துவம் எவ்வளவு பரிசுத்தமான இதயத்திலிருந்து—எவ்வளவு தூய்மையான உள்ளத்திலிருந்து புறப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டுமென்று கூறுவதும் மாநில சுயாட்சி என்பதும் மக்களுடையே மனத்திலே, ஏன்? நமக்குள்ளேயே ஒரே கருத்தைத் தரக்கூடியதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர்:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கும்போது ராஜராஜன் சிலையை வைக்க அதிகாரம்கொடு, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய் போட அதிகாரம் கொடு, இங்கே கோட்டையைச் சுற்றியுள்ள புல்லைச் செதுக்க அதிகாரம் கொடு, திரு ராமனுதன் சொல்லியதுபோல தெப்பக்குளத்தைச் செப்பனிட அதிகாரம் கொடு, தொழிற்சாலை துவக்க அதிகாரம் கொடு என்று ஒவ்வொரு அதிகாரமாகக் கேட்கிறோம் என்றால் அதுதான் உண்மை. அதையெல்லாம் சேர்த்து நாம் மொத்தமாகக் கேட்கிறோம்.

## மாநில சுயாட்சி

இவ்வளவு அதிகாரங்களைக் கொடு என்று ஒவ்வொன்றாகக் கேட்டு நமக்கு வாய் வலித்து, அவர்களுக்கும் காதுவலிக்கும் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சி என்ற தலைப்பில் கேட்கிறோம்.

திருமண விழாவில் பெண்ணுக்கு என்னென்ன வேண்டுமென்பதை தங்கக் காப்பு, பட்டுச்சேலை, வைர நகை என்று ஒவ்வொன்றாகக் கேட்டாலும், பெற்றாலும், மொத்தமாக அவற்றிற்குப் பெயர் சீர்வரிசை என்பது.

பெண்ணுக்கு நகை, சாமான்கள், நிலபுலன்கள் என்பதுதான் நாங்கள் சொல்கிற அதிகாரங்கள். அதைத் தான் நாங்கள் சீர்வரிசை கொடு என்று ஒரே வார்த்தையில் சொல்கிறோம். இதுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடு என்பதற்கும் சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடாகும்.

ஏதோ மாநில சுயாட்சி என்பது சுய-ஆட்சி என்கிற வார்த்தை இருப்பதால் விடுதலை பெற்றுச் சுதந்தர நாடாக வேண்டும், மாநில சுயாட்சி பெற்றுவிட்டோம், கோட்டை கொத்தளங்களில் பறந்துகொண்டிருக்கிற, அசோகச்சக்கரம் பொறித்த கொடியைக் கீழே இறக்கிவிட வேண்டுமென்று சொல்லுமளவிற்கு நாங்கள் மூடர்கள் அல்ல.

மாநில சுயாட்சி கேட்கிறவர்களில் தேசியப் பரம்பரையைச் சேர்ந்த —பலமுறை தேசியவிடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. இருக்கிறார் என்றால் அவரைப் பார்த்தாவது எங்கள் மீது உள்ள சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாதா?

## ஆட்சி மொழி

ஆட்சிமொழி என்று சொல்லுகிற காரணத்தால் புரிந்து கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கலாம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஆட்சிமொழி என்று எங்கே சொன்னார்கள்? ஆட்சி மொழி என்றால் இந்தியா முழுமைக்குமா என்று சந்தேகம் வருமென்று பிராந்திய மொழிதான் ஆட்சி மொழி என்று இணைத்த காரணத்தால் வேறு மொழியை நாம் பெறுகிறோம் என்று பொருள் அல்ல. நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது என்று சொல்கிறோம். அதைப் போலத்தான் நம்முடைய மாநிலத்தில் நம்முடைய காலில் நின்று கொண்டிருக்க வேண்டும். அதைத்தான் சொல்கிறோம்.

## ஆறு அம்சத் திட்டமும் சுயாட்சியும் ஒன்றல்ல

மத்திய அரசு மாநில அரசைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஒரு அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டாமென்று யாரும் குறிப்பிடவில்லை. படிப்படியாகப் பலமுறை நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். முஜிபுர் ரகுமானை பற்றிச் சொல்கிறார்களே என்று கேட்கிறார்கள்.

முஜிபுர் கேட்ட ஆறு அம்சத் திட்டத்திற்கும் முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

முஜிபுர் ரகுமான் மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் அவைகளைக் கேட்டார். அப்படிக் கேட்ட நேரத்திலேயே பாகிஸ்தானம் என்பது, ஆயிரம் மைலுக்கு அப்பால், கிழக்குப் பாகிஸ்தானும், இன்னொரு கோடியில் மேற்குப் பாகிஸ்தானும் இருக்கிறது; ஆகவே, இராணுவம் கூட எனக்குத் தனியாக வேண்டும். கரன்சி அடிக்கிற அந்த உரிமை கூட எனக்குத் தனியாக வேண்டும் என்றெல்லாம் முஜிபுர் ரகுமான் கேட்டார்.

நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—முஜிபுர் ரகுமான் கேட்ட ஆறு அம்சத் திட்டத்துக்கும், நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நாம் கேட்பது சுதந்தரம் அல்ல. முஜிபுர் ரகுமான் கேட்டதே கூடச் சுதந்தரம் அல்ல. சுதந்தரத்தில் போய் முடிந்ததற்கு யார் காரணம் என்றால், முஜிபுர் ரகுமான் அல்ல; யாகியாகான்தான்.

அவர் மாநில சுயாட்சிதான் கேட்டார், அவர் கேட்டது கொஞ்சம் காராசாரமானது. நாம் கேட்பதை விடக் கடுமையானது. மாநில சுயாட்சியை ஆதரிப்பது இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல; யார் யார் அதை ஆதரிக்கிறார்கள் என்பதை எல்லாம் அருமை நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் எடுத்து வைத்தார்கள் இந்த மன்றத்திலே பேசும்போது. நான்கூட அதைச் சட்டசபையில் படித்துக் காட்டலாம் என்ற எண்ணத்தோடுதான் அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றேன். அங்கே அதைப் படித்துக் கேட்க வேண்டிய முக்கியமானவர்கள் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமே கூட தன்னுடைய 1971-ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

அடுத்து 1971-ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இண்டியா—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், இதே கருத்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதன் தலைவர்களில் ஒரு சிலருக்கு, "என்ன, மாநிலத்துக்கு அதிக அதிகாரம் கேட்கிறார்களே, இது பிரிவினையில் கொண்டுபோய் விடுமோ" என்ற பயம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது

பத்திரிகையில் அவர்களுடைய அறிக்கைகளைப் படித்தேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்றால் சிலருக்குப் புரியாமலிருக்கலாம். அதுதான் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை.

(The Constitutional Provision relating to Centre-State relations should be provided for more powers to the State Consistent with the basic unity of the Country.)

—இது வலது கம்யூனிஸ்ட் கட்சியின்—இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தேர்தல் அறிக்கையாகும்.

இதைப் போல் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காக 4,5* பக்கங்கள் மத்திய மாநில உறவைப் பற்றியே அந்த அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தெரிவித்திருக்கிறார்கள்.

நான் கூடக் கேள்விப்பட்டேன். மைசூர் மாநிலத்தில் சோசலிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கையில் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற அந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் 1971-ஆம் ஆண்டிலே அவர்கள் பதவி விலகிய பிறகு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதை நண்பர் சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

நான் இன்னும் சுவையான ஒன்றைச் சொல்லுவேன் திருவீரேந்திர பட்டில் அவர்கள் பதவியில் இருந்தபோதே 1970-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி டெல்லிப் பட்டணத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அது அப்போது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. நம்மைவிடக் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள். அந்த அளவுக்கு வேகமாகப் போக நாங்கள் தயாராயில்லை; நாங்கள் தயாராயிருக்கவும் மாட்டோம்.

''நிலைமை இப்படியேபோய்க்கொண்டிருந்தால், மாநிலங்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுமானால், டில்லியிலே இருக்கிற மாநிலங்களுக்குச் சொந்தமான மாளிகைகள்—கட்டடங்கள் மிக விரைவில் தூதுவர் ஆலயங்களாக மாறக்கூடும்.''

இப்படிச் சொன்னார்கள். இதற்கு என்னபொருள் என்று நான் விளக்காமலேயே புரிந்து கொள்வீர்கள். நான் விளக்குவதும் நல்லதல்ல என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு வீரேந்திர பட்டீல் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நிச்சயமாக உருவாகக்கூடாது என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தியா பலவீனப்படக்கூடாது என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் பேசியதை சட்டப் பேரவையில் குறிப்பிட்டபோதுகூட—இன்றல்ல—இரண்டு நாட்களுக்கு முன், சுவாமிநாதன் அவர்கள் இருக்கிற கமிட்டியிலே உள்ளவர்தான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது தவறு என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்ற பொருள்படச் சொன்னார்கள். நான் நண்பர் திரு. சுவாமிநாதனுக்கு மற்றொரு போர்க் கருவியைத் தர விரும்புகின்றேன். அவர்கள் கட்சிக் கூட்டத்திலேயே அந்தப் போர்க் கருவியைப் பயன்படுத்தலாம்.

## இராஜாஜி சொன்னது....

*1967-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 19-ஆம் நாள் கல்கி தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்;*

''தி.மு.க. ஏதோ ஒரு பிரதேசத்துக்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லையென்றும் மேலெழுந்தவாரியாக சிலர் நினைத்து விடலாம். இவர்களுக்கு தி.மு.க.வின் அடிப்படையை ராஜாஜி தெளிவு செய்திருக்கிறார்''—''ராஜாஜியின் கருத்துக்கள் பின்னால் வருபவை.—''அதாவது ; எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுயாதீனம் பெற்று, அவற்றின் சமஷ்டியாக தில்லி சர்க்கார் அமைய வேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்னையையே தி.மு.க. தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆளுவதை 'யூனிடெரி' முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை பெடரல் (சமஷ்டி) முறை என்றும் சொல்லுவார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுவது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகரசபையின் ஸ்தானத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புகளை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அத்தோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கி ஆளும் கொடுமையும் சேர்கிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி.மு. கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியே'' இது மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்ன கருத்து.

ஆகவே நண்பர் திரு சுவாமிநாதன் அவர்களுக்கு நல்லதோர் போர்க்கருவியாக இதை நான் அவர்களுடைய கரங்களில்

அளிக்கிறேன். (கைதட்டல்) அடுத்த கட்சிக் கூட்டத்தில் இதை வைத்துக்கொண்டு கட்சியில் வாதாடி வெற்றி பெறுவார் என்று திடமாக நம்புகிறேன்.

திரு கே. ராஜாராம்: இது எந்தத் தேதியில் எழுதப்பட்டது?

முதல்வர் கலைஞர்: 19—3—1967.

திரு கே. ராஜாராம்: அது 1967-ஆம் வருடம். அதனால்தான் அப்படி.

முதல்வர் கலைஞர்: நீங்கள் அப்படிச் சொல்லுவீர்கள் என்பதற்காகத்தான் நான் 1957-ஆம் ஆண்டில் அவர்கள் எழுதியதையும் கொண்டு வந்திருக்கிறேன். அது வெளியே தெரியவேண்டாம் என்றுதான் மறைத்து வைத்திருந்தேன்.

1957-ல் இதைவிடத் தீவிரமாக ''திராவிடத்தைக் காப்போம்'' என்ற தலையங்கத்தை 24—3—1957 கல்கியில் எழுதியிருக்கிறார்கள். திராவிட நாடே வேண்டும் என்று எழுதினார்கள். அப்போது எங்களுக்கும் அவர்களுக்கும் உறவு இல்லை.

உறவு இருக்கும்போது ஒரு கொள்கை என்பதும் உறவு இல்லாதபோது அந்தக் கொள்கையிலிருந்து மாறுவது என்பதும் நல்லதல்ல.

ஏனென்றால் எங்கள் அரசைப் பற்றி ஆயிரம் குறைகள் சொல்லலாம். நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது விலையேற்றத்தைப்பற்றிச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களுக்கு அரிசி போவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று 1957-ல் எடுத்த முடிவில் அசையாமல் நின்றார்கள், அவர்களுடைய-தலைவர்கள் அசைத்து விட்டார்கள் என்பதுதான் கவலைப் படத்தக்கதாகும். ஆனால் நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் போன்ற வாலிபமுறுக்கு உடையவர்கள், அவர்களைத் திருத்த வல்லவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள் 'முதலமைச்சர் அவர்கள் கவிழ்க்க முடியுமா என்றுகேட்கிறார்கள்; ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கவிழ்ப்போம் என்று சொல்கிறார்கள்' என்று சொன்னார்கள்.

இதிலே அவர்கள் ஒன்றை மாற்றிச் சொல்லிவிட்டார்கள். கவிழ்ப்போம் என்று சொல்லிய பிறகுதான், கவிழ்க்க முடியுமா என்ற கேள்வியைக் கேட்க முடியும். கவிழ்ப்போம் என்று சொல்லுவதற்கு முன்னாலேயே, கவிழ்க்க முடியுமா என்று கேட்டுக் கொண்டு இருந்தால், இப்போதுதான் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலிருந்து முதலமைச்சர் வெளியே வந்திருக்கிறார் என்றுதான் கருதிக்கொள்வார்கள். நான் எங்கேயும் எங்களைக் கவிழ்க்க முடியுமா என்று பேசவில்லை. நண்பர் ஆறுமுகசாமியின் சொந்தக்காரர்தான் பேசினார். யார் என்று அவருக்கே தெரியும். பல இடங்களில் பேசியிருக்கிறார். அப்படிப் பேசிவிட்டு மதுரை மக்களை, திருச்சி மக்களைப் பார்த்து என்ன சொல்கிறீர்கள்; கருணாநிதி அரசாங்கத்தைக் கவிழ்ப்போமா என்று கேட்டிருக்கிறார். அங்கேயிருந்த 5, 6 பேர்கள் 'கவிழ்ப்போம்'— 'கவிழ்ப்போம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

### சீட்டுக் கட்டா, கலைப்பதற்கு?

கருணாநிதி சர்க்காரைக் கலைக்கட்டுமா என்று கேட்டால், இது என்ன சீட்டுக் கட்டா, யார் வேண்டுமானாலும் கலைத்து விட? நான் கேட்கிறேன்: தமிழ் நாடு அரசாங்கத்தைக் கலைக்கிற அளவுக்கு என்ன அராஜகம் ஏற்பட்டு விட்டது? ஒரிசா நிகழ்ச்சியா, கேரளா நிகழ்ச்சியா, அரியானா நிகழ்ச்சியா, மத்தியப் பிரதேச நிகழ்ச்சியா?

அல்லது இங்கே கட்சிக்குள்ளே பெரிய கலாம் நடந்து விட்டது, முதலமைச்சர் மாறிவிட்டார், யார் முதலமைச்சர் என்று தெரியவில்லை, ஆகவே கவிழ்த்துவிட்டோம் கலைத்து விட்டோம் என்று சொல்ல; அதை யாராவது எதிர்பார்ப்பார்களானால், அவர்கள் இலவு காத்த கிளி ஆவார்கள். அது எங்கள் கட்சிக்குள்ளே என்றைக்கும் நடக்காத காரியம். அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் நடைபெற்றுவிடாது. தமிழ் நாட்டில் தமிழ்நாட்டு அரசாங்கம் தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு என்ன அமளி ஏற்பட்டு விட்டது? முதுகுளத்தூரில் அது நடைபெற்ற காலத்தில் கூட தமிழ்நாட்டு அரசாங்கம் கலைக்கப்படவில்லையே. 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு புரட்சி நடைபெற்றதே அந்த நேரத்தில்கூடத் தமிழ்நாட்டு அரசாங்கம் கலைக்கப்படவில்லையே.

அப்போது உள்துறை அமைச்சராக இருந்த குல்ஜாரி லால் நந்தா அவர்கள் பாராளுமன்றத்தில் பேசியதாக, நான் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலிருந்து பத்திரிகையில் படித்துப் பார்த்தேன். 'இவ்வளவு பெரிய புரட்சி நடை பெற்றும் முதலமைச்சர், பக்தவத்சலம் மனம் தளராது பாறை போன்று நின்றார்' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாறை என்று என்ன பொருள்படக் கூறினார்களோ எனக்குத் தெரியாது. அப்படி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக என்ன காரணம் இந்த அரசைக் கவிழ்ப்பதற்கு? இன்றைக்கு என்ன ஏற்பட்டு விட்டது? ஏன் கவிழ்க்க வேண்டும்?

## 234 இடங்களையும் பிடிக்கும்

மாநில சுயாட்சி கேட்ட குற்றத்திற்காக, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்ட குற்றத்திற்காக கவிழ்க்கிறோம் என்றால் கவிழ்க்கட்டுமே? கவிழ்த்தால் என்ன ஆகும்? ஆறு மாத காலம் திரு கே. கே. ஷா அவர்கள் நேரடியாக ஆட்சி புரிவார். ஆளுநர் பெருமான் அவர்கள் எங்களுக்கு வேண்டாதவரா? கொஞ்ச காலத்துக்கு ஆண்டுவிட்டுப் போகட்டுமே. அதற்குப் பிறகு தேர்தல் கிடையாதா? அந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம், "எங்களைக் கவிழ்த்தார்கள் பொதுமக்களே, தீர்ப்பு அளியுங்கள்" என்று சொல்லிக்கொண்டே, 234 இடங்களையும் பிடிக்கும்.

நாங்கள் என்ன அழிந்தா போவோம்?

இது என்ன சாக்கடையில் கொட்டப்படுகின்ற பாலா? சாக்கடையோடுபோய்விடும், எடுக்க முடியாது என்பதற்கு. நான் நேற்று ஒரு கூட்டத்தில் சொன்னேன். கடலிலே கவிழ்க்க முனைகின்ற கட்டுமரம் போன்றது திராவிட முன்னேற்றக்கழகம். கட்டுமரமாகவே இருப்பது கவிழாது. இது கப்பல் அல்ல கவிழ்ந்துவிட.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு கட்டு மரம். சாதாரண மக்களால், சாமான்யமான மக்களால், கிராமப்புற ஏழை மக்களால், பஞ்சைப் பராரிகளால், பாட்டாளி தொழிலாளிகளால், மொழி காத்திடப் போரிட்ட உத்தமர்களால் உருவாக்கப்பட்ட அரசு திராவிட முன்னேற்றக்கழக அரசு. அரசியல் நாகரிகத்தின் பிறப்பிடம் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தக் கழகத்தை 22 ஆண்டுக்காலம் வளர்த்தார்கள் என்றால் நாடு மெச்ச நாநிலம் போற்ற இந்தக் கழகத்தை வளர்த்துச் சாமான்ய மக்களின் ஒரே பிரதிநிதியாக திராவிட

முன்னேற்றக்கழக அரசைக் கொலுவீற்றிருக்கச் செய்திருக்கிருர். அதைக் கவிழ்த்து விடுவோம் என்று சிலர் பேசுகிருர்கள் என்ருல்—அப்படி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசமாட்டார்கள். அவர்களுக்கு ஜனநாயகம் தெரியும், அப்படிப் பேசுவது திரு ஜகஜீவன்ராம் அல்ல, திரு சவான் அல்ல, அவர்களெல்லாம் பொறுப்பான இடத்திலிருப்பவர்கள். திரு சி. சுப்பிரமணியம் அல்ல, அவரும் பொறுப்பான இடத்தில் இருப்பவர். ஆனுல் இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் பேசுவது பெரியவர்கள் தலையில் போய் விழும். ஆகவே அவர்கள் உடனடியாகத் தலையிட்டு இப்படிப்பட்ட பேச்சுகள் தேவையில்லை என்று கூறுவது நல்லது.

முன்னேற்றக்கழக அரசின் பேரில் ஆயிரம் குற்றங்கள் கூறட்டும். யார் வேண்டுமானுலும் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோம், கலைத்து விடுவோம் என்று கூறுவது முறையற்ற பேச்சாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னுல் பெரியவர் பக்தவத்சலத்தைப் போன்றவர்கள் சொல்கிருர்களாம். இந்திரா காந்தி பெயரைச் சொல்லித்தானே 1971—ல் நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள் என்று. அதே இந்திரா காந்தி பெயரைச்சொல்லி 1967—ல் நீங்கள் ஏன் வெற்றி பெறவில்லை என்று திருப்பிக் கேட்கமாட்டோமா? இன்னென்றையும் சேர்த்துக் கொள்ளலாம். 1971—ல் இந்திரா காந்தி பெயரைச் சொன்னேம், 1967—ல் திரு பக்தவத்சலத்தின் பெயரைச் சொல்லித்தான் வெற்றி பெற்றேம். இது நாடு அறியும். நாங்கள் தேர்தலுக்கு முன்பு அவர் பெயரைச் சொன்னேம். தேர்தலுக்குப் பிறகு திரு கருத்திருமன் போன்றவர்கள் சட்டமன்றத்தில் அவர் பெயரை அடிக்கடி சொன்னுர்கள்—நாங்கள் இங்கே வந்துஉட்காரக் காரணமே அந்த மகான்தான் என்றெல்லாம் சொல்லியிருக்கிருர்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பெயரைச் சொல்வது அப்படி ஒன்றும் அவமானகரமானதல்ல. ஏனென்ருல் பெரிய ஜனநாயகவாதியான பண்டித நேருவின் திருச்செல்வியார் அவர்கள். இந்தியா பலவீனப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழகமோ, இந்த அரசோகருதியிருந்தால் நாங்கள் பலவீனப்படுத்தியிருக்க முடியும். எப்படி? திருமதி இந்திரா அரசுக்கு ஓர் ஆபத்து ஏற்பட்டபோது எங்கள் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த அம்மையார் பக்கத்தில் நின்ற காரணத்தால் அன்றைக்கு திருமதி இந்திரா அரசு நிலைத்தது என்பதை நாடு அறியும். அப்பொழுது பலபேர் எங்களைத் தூண்டிவிட்டுப் பார்த்தார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறீர்கள். ஏன் இப்பொழுது திருமதி

இந்திரா காந்தி அவர்களின் அரசைப் பலவீனப்படுத்தக் கூடாது என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு நான் சொன்ன பதில் மத்திய அரசு இருந்தால் தானே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கலாம். அதைக் கவிழ்த்துவிட்டு இந்தியாவைப் பலவீனப்படுத்திவிட்டு யாரிடத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது என்பதுதான்.

ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற எண்ணம், கொள்கை, இந்தியாவைப் பலவீனப் படுத்தும் கொள்கையாக இருந்திருந்தால் திருமதி இந்திரா அம்மையார் அரசுக்கு ஆபத்து வந்தபோது நாங்கள் எதிராக நின்றிருக்கக் கூடும். அப்படி நிற்காமல் நாங்கள் இந்திரா அம்மையார் அரசினைக் காப்பாற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பார்த்தாலே தெரியும். இந்தியா பலவீனப்படக்கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆழ்ந்த பற்றும் அழுத்தமான நம்பிக்கையும் உண்டு என்பதை எடுத்துக் காட்டத் தான் இந்த உதாரணத்தைச் சொன்னேனே தவிர,வேறு அல்ல.

## கோரிக்கையின் அடிப்படை

ஆகவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான் மாநில சுயாட்சித் தத்துவமே அல்லாமல் மாநிலம் இந்தியாவிலிருந்து துண்டித்துக் கொண்டு—சுதந்தர நாடாக வாழவேண்டும் என்பதற்காக நாங்கள் இப்படிப் பட்ட கோரிக்கைகளைச் சொல்லவில்லை என்று கூறிக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ராஜமன்னார் குழு அறிக்கையினைப் பற்றிக் கலந்து பேசவேண்டும் என்று சொன்னார்கள். அடுத்தக் கூட்டத் தொடரில் நாம் இதற்காகச் சில நாட்களை ஒதுக்கி ராஜமன்னார் குழு அறிக்கையைவிவாதித்த பிறகு அதற்குப் பிறகு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உட்காரவைத்து ராஜமன்னார் குழுவின் அறிக்கையில் எவ்வெவற்றை வலியுறுத்தலாம்,அரசின் சார்பில் என்று அனைத்துக் கட்சி அபிப் பிராயத்தைக் கேட்கத் தயாராக இருக்கிறேன்.ஏனென்றால் இன்றையத் தினம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையினைப் பார்த்தால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டாமென்று சொல்ல யாரும் தயாராக இல்லை. ஆகவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்றுதான் அனைவரும் சொல்லியிருக்கிறீர்கள். இது மிகுந்த மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

அந்த அடிப்படையில் ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றி நாம் நீண்டதொரு விவாதம் நடத்தி விட்டு உறுப்பினர்கள் தருகின்ற நல்ல நல்ல கருத்துக்களை எல்லாம் சேர்த்துத் தொகுத்து அவைகளையெல்லாம் முன்வைத்து அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் அதைப்பற்றி ஆலோசித்து, அவைகளையெல்லாம் நாம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இந்த வகையில் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மற்றும் கூறப்பட்ட பல்வேறு விஷயங்களுக்கு இந்த அரசின் சார்பில் அவைகளுக்கெல்லாம் நல்ல நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியினை அனைவருக்கும் அளித்து இந்த விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர் அனைவருக்கும் நன்றி கூறி, இந்த அளவில் விடைபெறுகிறேன்.

PUBLIC LIBRARY
19 FEB 1972
MADRAS

தமிழ்நாடு அரசினர் அச்சகம், சென்னை.

2933

